விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை (20.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அனைத்து மக்களுக்கும் நிரந்தர அரசியல் தீர்வு!

## பிரதமர் யாழில் தெரிவிப்பு



இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

சமய நிறுவனங்களை மேம்படுத்தல் மற்றும் ஆன்மிக வளர்ச்சி தொடர்பான செயல்திட்டத்தின் கீழ் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இந்து ஆலயங்களுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த நாட்டில் முப்பது வருட பயங்கரவாதத்தினால் சகல இனங்களும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உலகமே இன்று உணர்ந்துள்ளது. பயங்கரவாதம் மீண்டும் வரக்கூடாது என நினைக்கும் மக்களும் இங்கு இருக்கிறார்கள்.

அதேவேளை மீண்டும் பயங்கரவாதம் உருவாக வேண்டும் என எண்ணுபவர்களும் இங்கு இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த நாட்டில் வாழும் நாங்கள் அழிவுகளற்ற, அமைதியான, அச்சுறுத்தல்கள் இல்லாத வாழ்வையே விரும்புகிறோம். அழிவுகள் தந்த துன்பங்களில் இருந்து மீண்டு வந்து கொண்டிருக்கின்றோம்.

மதம், கலாசாரத்தினால் நாங்கள் வேறுபட்டவர்களாக இருந்தாலும் எங்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றாகத்தான் இருக்கும். இனம் என்பது நிலையானதல்ல. மனித வர்க்கமே நிலையானது.


சுயநல (19ஆம் பக்கம் பார்க்க)

# 680 போராளிகள் 27-ம் திகதி விடுதலை

இறுதிக் கட்ட போரின்போது படைத்தரப்பினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளில் ஒரு தொகுதியினர் எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து விடுதலை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு அருகில் நேற்று மாலை பூகம்பம்




இலங்கைக்கு தென் மேற்கே சுமார் 341 கிலோமீற்றர் தொலைவில் நேற்று மாலை 4.7 ரிச்டர் அளவிலான பூகம்பமொன்று ஏற்பட்டது.

எனினும் (20ஆம் பக்கம் பார்க்க)

# ஆணைக்குழுவின் அறிக்கை இன்று ஜனாதிபதிக்கு கிடைக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

மாலை 6:30 மணியளவில் இந்த அறிக்கை அவரிடம் கையளிக்கப்படும் என ஆணைக் குழுவின் ஊடக பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கடந்த 15 ஆம் திகதி நள்ளிரவு நிறைவடைந்ததுடன் ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, ஜனாதிபதி செயலகமே தீர்மானிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆணைக்குழுவானது கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை குறைந்தது

## அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 422 ஆக குறைவடைந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வரை வெளியான புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மனிதாபிமான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 318 பேர் இடம்பெயர்ந்திருந்தனர். அவர்கள் தற்காலிகமாக வவுனியா, மன்னார், திருகோணமலை, மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் அமைக்கப்பட்ட நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் சர்வதேச ஆதரவு நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் அவர்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இதன்படி தற்போது பல நலன்புரி முகாம்கள் மூடப்பட்டுள்ளன. (எ-9)

# சீனாவுக்குப் போட்டியாக இந்தியா இலங்கைக்கு உதவியளிக்கவில்லை

## சியாம் சரண் விளக்கம்

இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையிலேயே இலங்கைக்கான உதவிகள் வழங்கப்படுவதாக இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய - இலங்கை நட்புறவுக்கழகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு இலங்கை - இந்திய நட்புறவு மற்றும் ஆசியாவின் மீள்எழுச்சி என்ற கருப்பொருளில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் துறைமுகம் ஒன்றை சீனா அபிவிருத்தி செய்தால், சீனாவுக்குப் போட்டியாக (19ஆம் பக்கம் பார்க்க)



# வவுனியாவில் வெடிபொருள் மீட்பு

வவுனியா, கல்மடுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவினரால் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைத்த தகவலையடுத்து, குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் பொறுப்பதிகாரி எஸ்.திஸாநாயக்க தலைமையில் பொலிஸ் குழுவினர் புதைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களை மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் கிளைமோர் குண்டுகள் -18, செல் மோட்டார் -1, டெட்டனேட் (19ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட



SINGER POWER ஜெனரேட்டர்கள்
இன்றே விரையுங்கள்.

Power 900.
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

சங்கானை 077 2208232
கரடிபோக்கு சந்தி, கிளிநொச்சி 077 4685771
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



மல்லாகத்தைச் சேர்ந்த எஸ்.அந்தோனிப்பிள்ளை என்பவர் தொழில் செய்யும்போது ஏற்பட்ட விபத்தில் வலது கையின் நான்கு விரல்களையும் இழந்தமைக்காக யூனியன் அஸ்யூரன்ஸ் பி.எல்.சி. நிறுவன யாழ்ப்பாண கிளையினால் இழப்பீடு வழங்கப்பட்டது.

இவ் இழப்பீட்டுக்கான காசோலையை நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் என்.சுகுணன் வழங்குவதையும் அருகில் விற்பனை முகாமையாளர் ஜி.சிறிவரதன் உள்ளிட்டோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# லண்டன் முத்துமாரி அம்மன் ஆலய சித்திரத்தேர் தீவைத்து அழிப்பு

(லண்டன்)

லண்டன் ரூட்டிங் பகுதியில் சிவயோகம் அறக்கட்டளையின் கீழ் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் அருள்மிகு லண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயிலின் சித்திரத்தேர் கடந்த 16ஆம் திகதி இரவு 11 மணியளவில் தீவைத்து அழிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அன்று இரவு 9 மணிக்கு அர்த்தசாமப் பூசை முடிபுற்று திருக்கோயில் நடைசாத்தப்பட்டது. சுமார் இரவு 11 மணியளவில் நான்கு பேர் கொண்ட குழுவொன்று எரிபொருட்கள் சகிதம் சென்று கடந்த 11 வருடங்களாக அம்பாள் திருவீதியுலா வந்த சித்திரத்தேரை தீவைத்து அழித்துள்ளனர்.

நான்கு பேர்களால் நடத்தப்பட்ட இந்த நாசகாரச் செயற்பாடுகள் அனைத்தும் துல்லியமாக திருக்கோயில் பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ளன.

இப்பதிவுகள் அனைத்தும் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் அமைந்திருக்கும் கட்டிடத்தின் குத்தகைக்காலம் மார்ச் 2011 உடன் முடிபடைந்து விட்டது.

நீதிமன்றம் கட்டிடத்தில் இருந்து உடனடியாக திருக்கோயிலை வெளிக்கொண்டு செல்ல வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்ற தீர்வுக்கமைய அம்பாளுக்கு சொந்தக்காணி கொள்வனவிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வால்யம் தனியாக வழிபாட்டுத்தலமாக அமையாது தமிழர்களின் கலாசார சின்னமாகவும் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# கடாபியின் மகன் இஸ்லாம் கைது

(திரிபோலி)

லிபியாவின் முன்னாள் அதிபர் கேணல் கடாபியின் மகன் சயீவ் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்ஜீரியா நாட்டின் எல்லைக்கு அருகில் உள்ள ஒபாரி நகரில்வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக லிபிய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

லிபிய தலைநகர் திரிபோலியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் ஸிண்டான் பிராந்திய களத் தளபதி பஷிர் ஜுமா தயீல்பா இதுகுறித்து கூறுகையில், சயீவ் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் ஸிண்டான் நகருக்கு கொண்டு வரப்படுவார் எனவும் கூறினார்.

இக் கைது தொடர்பான தகவல் துல்லியமானது எனவும் இது குறித்த விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இக் கைது குறித்து நாம் மகிழ்ச்சியடைந்துள்ளோம். அதனால்தான் லிபிய மக்களுக்கு அறிவிப்பதற்காக இத்தகவலை உங்களிடம் விரைவாக கூறுகிறோம் என அவர் கூறினார். (ச-5)

# வாழ்வாதாரத்திற்காக அவதிப்படும் முல்லை மீனவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் கடலுக்குள் செல்வதில் இருந்த பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பல்வேறு பற்றாக்குறைகளுக்கு மத்தியிலேயே தாங்கள் தொழில் செய்ய வேண்டியிருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

தொழில் செய்வதற்கு ஆர்வம் இருக்கின்ற போதிலும், உபகரணங்கள் வைத்திருக்கின்ற ஒரு சில மீனவர்களிடம் கூலி வேலை செய்தே வாழ்க்கை நடத்த வேண்டியிருப்பதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் ஆரம்பமாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகின்றது. எனினும் பல பிரதேசங்களில் இன்னும் மீள்குடியேற்றம் அனுமதிக்கப்படாத காரணத்தினால் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மீனவ குடும்பங்களே தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பியுள்ளன.

இந்தக் குடும்பங்கள் மீள் குடியேறிய ஒழுங்கிற்கு அமைய அரசாங்கமும், தொண்டு நிறுவனங்களும் கட்டம் கட்டமாக உதவிகளை வழங்கி வருகின்றன. இதனால் ஒரே நேரத்தில் எல்லோருக்கும் உதவிகள் கிட்டவில்லை என மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மீனவர்களுக்குரிய படகுகள் போதிய வலைகள் மற்றும் உபகரணங்கள் கிடைக்காத காரணத்தினால் பெரும்பான்மையானவர்கள் கூலித் தொழில் செய்தே தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள்.

கடும் சண்டைகள் நடைபெற்ற இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் வெறும் கையுடன் தமது கிராமங்களுக்குத் திரும்பியிருப்பதனால், தமது வாழ்வாதாரத்திற்கு அரசாங்கத்தினதும் தொண்டு நிறுவனங்களினதும் உதவியையே நம்பியிருக்கின்றனர்.

அரசாங்கம் மீனவர்களுக்குரிய படகுகள் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கியுள்ளதுடன், தொண்டு நிறுவனங்களும் உதவி வருவதுடன் மீனவர்களுக்குரிய தொழில் பயிற்சிகளையும் வழங்கி வருவதாக கடற்தொழில் உதவிப் பணிப்பாளர் டேவிட் திருஞானரட்னம் தெரிவிக்கின்றார்.

ஆயினும் போர்ப்பிரதேசங்களில் இருந்து எடுக்கப்பட்ட படகுகளை அரசாங்கம் திருத்தம் செய்து மீனவர்களுக்கு வழங்கியுள்ளவை.

உட்பட தொண்டு நிறுவனங்களினாலும், அரசாங்கத் தினாலும் இதுவரையில் சுமார் 300 படகுகளே மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சிறிஸ்கந்தராஜா அருள் ஜெனிபட் கூறியிருக்கின்றார். (எ-9)

# பூந்தோட்டம் வாவியில் குளிக்கச் சென்றவர் பலி

(வவுனியா)

வவுனியா பூந்தோட்ட வாவியில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந் துள்ளார். உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது. உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-1)

பாமசிக்கு ஆள் தேவை

நெல்லியடியில் உள்ள பாமசிக்கு முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு: 0771267222

(C-5007)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டிருக்கலாம்-கோத்தபாய

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டிருக்க வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருதியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்திற்கும் அந்நாட்டு ராஜாங்கத்திணைக் களத்திற்கும் இடையில் நடைபெற்ற தகவல் பரிமாற்றத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டீனாஸ் இந்தத் தகவல்களை அனுப்பி வைத்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நியாயமான மற்றும் தொழில் சார் தகுதி உடைய ஓர் அரசியல் வாதி எனவும் அவரே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டிருக்க வேண்டும் எனவும் கோத்தபாய கருதியதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின்போது பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு அஞ்சவேண்டிய அவசியம் கிடையாது என ரணில் விக்கிரமசிங்கவிடம் தாம் தெரிவித்ததாகத் தெரிவித்துள்ளார். எனினும் முன்னாள் ராணுவத் தளபதிவன் முறைகளைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக தாம் ரணிலிடம் கூறியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நடவடிக்கைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் பொன்சேகாவும் ஜே.வி.பி. யுமே அவற்றுக்குப் பொறுப்பெனவும் ரணில், தம்மிடம் தெரிவித்ததாக கோத்தபாய குறிப்பிட்டுள்ளாரென விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. (பா)

# சிங்கள இனத்தவன் என்பதால் வேதனையடைகிறேன்-அர்ஜுன

(கொழும்பு)

சிங்கள இனத்தவர் என்ற வகையில் நாம் எவ்வளவு மிலேச்சத்தனமானவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு மூன்றாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியகாலம் உதயமாகியுள்ளதாகவும் இந்த நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மனிதருக்கு இன்று நேரும் நிலைமைகள் இலங்கையர் என்ற வகையில் அதிருப்தி அளிக்கிறது என்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் நான் வேதனைப்படுகின்றேன்.

தொடர்ச்சியாக ஏகாதிபத்திய ஆட்சியை மேற்கொள்ள முயற்சித்தால் சதாம் ஹுசெய்ன் மற்றும் லிபிய தலைவருக்கு ஏற்பட்ட நிலைமையே ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டை மீட்டெடுத்தமைக்கான பரிசாக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். (ச-பா)

வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் யாழ். நகருக்கு 5 நிமிடங்களில் சென்று வரக்கூடிய சகல வசதிகளும் கொண்ட 3 வாகனங்கள் நிறுத்தக் கூடிய முன், பின் (இருபக்கம்) தோட்டம் கொண்ட இடவசதியுள்ள சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட 3 படுக்கை அறைகள், விசாலமான வரவேற்பறை, நவீன முறையிலான சமையலறை, 2 குளியலறைகள், முழுஅளவில் மாபிள் பதிக்கப்பட்ட மற்றும் இதர வசதிகள் கொண்ட பிரபல்யமான வீதியில் அமைந்திருக்கும் வீடு வாடகைக்கு உண்டு. (தொண்டு நிறுவனங்கள் மற்றும் அலுவலக பாவனைக்கு உகந்தது)

தொடர்பு: 0716091020

(6827)



தொலைக்காட்சியில் தோன்றவேண்டும்
வானொலி அறிவிப்பாளர் ஆகவேண்டும்
பத்திரிகையில் உங்கள் ஆக்கம் வெளிவரவேண்டும்
சொந்தமாக இணையத்தளம் நடத்தவேண்டும்

இவைதானே உங்கள் ஆசை!

உங்கள் ஊடகக் கனவுகளை நிறைவேற்ற இதோ ஓர் அரிய வாய்ப்பு

யாழ் FM, அலை FM, வலம்புரி, தினக்குரல், தினமுரசு

JAFFNA TODAY Day சகரம் Thesam Net

ஆகிய ஊடகங்களில் நேரடிப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடனான

ஊடகப் பயிற்சிநெறி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
யாழ், கொழும்பு மற்றும் வெளிநாட்டு பயிற்சியாளர் (நேரடி & Video Conference) இணைந்த
தேர்ச்சிபெற்ற அணியின் இடையறாத பயிற்சி, வழிகாட்டல்

அணி 1 திங்கள் - வெள்ளி (முழு நேரம்)
அணி 2 சனி, ஞாயிறு (பகுதி நேரம்)

இணைய விரும்பும் அணியைக் குறிப்பிட்டு, சுயவிபரக்கோவை மற்றும் பயிற்சி நெறியைத் தொடர விரும்பும் காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து,

சிகரம் ஊடக இல்லம்

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்.
தெரிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு புலமைப்பரிசில்கள் உண்டு

# 44 ஆவது ஆண்டு விழா

வல்வை கணபதி படிப்பகத்தின் 44 ஆவது ஆண்டு விழாவும் பாலர் தின விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகரசபை முதல்வர் ந.ஆனந்தராஜ், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர் திருமதி மங்களேஸ்வரி சேதுலிங்கம், பூ.அகமணிதேவர் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# கரைதுறைப்பற்று பி.செ. பிரிவில் மீள்குடியமரவுள்ள மக்களுக்கு

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி கிராமசேவையாளர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏற்கனவே மீள்குடியேறிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களில் தமது சொந்த இடங்களிற்கு செல்ல விரும்புவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மீள்குடியேற்றத்திற்கான ஆயத்தங்களுடன் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இவர்கள் மீள்குடியேற்றத்திற்கு வரும்போது இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் மேல் ஒப்பமிடப்பட்ட விடுப்பு கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (அ)

# இராசி பலன்

20.11.2011

(கார்த்திகை04, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

தசமி முன்னிரவு 11.52 மணிவரை

பூரம் முற்பகல் 11.52 மணிவரை

இராகுகாலம் 4.39-6.09மணிவரை

சுபநேரம் 9.09-10.39 மணிவரை

மெய்ப்பொருள் நாயனார் குருபூசை, சித்தாமிர்தம்.

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், மாயவர் வழிபாடு மகிழ்ச்சி தரும், பிள்ளைகளால் பெருமைகள் சேரலாம்.

**இடபம்** வாகன சுகத்தால் வளம் காணும் நாள், புதிய தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் வந்து கூடும், முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தில் பொறுப்புக்கள் அதிகரிக்கும், சகோதர ஒற்றுமை பலப்படும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**கடகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம், தொலை தூரத்திலிருந்து இனிய செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், திடீர் பயணங்கள் உருவாகலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், போசன சுகமுண்டு.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் ஏற்படலாம், குடும்பத்தினை அனுசரித்து செல்ல வேண்டிய நாள், வழிபாட்டில் நாட்டம் செல்லும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் தோன்றும்.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** தெய்வ வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் நலன் சீராக ஒரு தொகை செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், எதையும் பலமுறை சிந்தித்து செய்ய வேண்டிய நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கணவன்- மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கௌரவமான நாள்.

**மீனம்** நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் நடைபெறும் நாள், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், மாற்று மருத்துவத்தால் ஆரோக்கியம் சீராகும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும்.

வளவன்

# வழக்குகள் திகதி மாற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் கடந்த 17 ஆம் திகதி நடைபெறாத வழக்குகள் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-3-29)

# பத்து வர்த்தகர்களுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வர்த்தக நிலையங்களை திடீர் பரிசோதனை செய்த கொழும்பு நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபையின் பரிசோதகர்கள் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, குறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் 10 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்குத் தொடுக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா மேற்குறித்த வர்த்தகர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்திற்கு சமுகளிக்குமாறு அழைப்புக்கட்டளை அனுப்புமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டார். (அ-3-29)

# பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பகுதிகளில் வளர்க்கப்படும் பெண் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலைப் பகுதியில் உள்ள புங்கன்குளம், காந்தி சனசமூக நிலையங்களிலும் நாளை திங்கட்கிழமை கொழும்புத்துறை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம் மற்றும் [illegible] நிலையங்களிலும் இச் சிகிச்சை நடைபெறவுள்ளது. (அ)

# நீதிமன்றத்தால் அபராதம்

(சாவகச்சேரி)

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் 3 நபர்கள் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு மூவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித்தீர்ப்பளித்தார். (அ-3-29)

# வாரம் ஒரு தகவல்

## சங்கீத சாதனை

"பெரிய சங்கீத வித்துவான் என்று சொல்லுகிறீர்கள் உங்கள் மனைவி... நான், பெருமைப்படுகிற மாதிரி ஏதாவது செய்ய வேண்டாமா?"

"என்ன செய்ய வேண்டும்?"

"ஏதாவது உலக சாதனை செய்யுங்களேன். கொசு அடிப்பதில் கூட ஒரு இளைஞன் உலக சாதனை செய்திருக்கிறான்."

"எங்கே?"

"பின்லாந்து நாட்டில்; அவன் பெயர் ஹார்ரி பெல்லோன்பா; வயது 17; ஐந்து நிமிடத்தில் 21 கொசுக்களை அடித்திருக்கிறான்!"

"இது ஓர் உலக சாதனையா?"

"ஆமாம், இதற்கு முன்பு ஒருவர் ஐந்து நிமிடத்தில் 7 கொசுக்களை அடித்ததுதான் இதுவரைக்கும் உலக சாதனையாக இருந்தது!"

"இதற்கும் ஒரு போட்டியா?"

"இந்தப் போட்டியில் 20 பேர் கலந்து கொண்டார்கள். வெற்றி பெற்றவர்களிற்கு ஒரு வெள்ளிக்கோப்பையும் சுற்றுலா சென்று ஒரு வாரம் தங்குவதற்கு அனுமதியும் பரிசாக வழங்கினார்கள்."

"அதற்கு இப்போது என்னை அதுமாதிரி கொசு அடிக்கச் சொல்லுகிறீர்களா?"

"அப்படியா சொன்னேன்...? நீங்கள் சங்கீதத்தில் ஏதாவது சாதனை செய்யலாமே?"

"இன்று நடந்த கச்சேரியில் கூட ஒரு சாதனை செய்திருக்கிறேன்."

"என்ன சாதனை...?"

"ஒரே தோடி இராகத்தில் அமைந்த பாடலை 13 தடவை பாடியிருக்கிறேன்... யாரோ ஒரு ரசிகர் ஒன்ஸ்மோர் கேட்டு சீட்டில எழுதி அனுப்பிக்கொண்டே இருந்தார்!"

"சீட்டு அனுப்பினது நான்தான்!"

"அப்படியா...? அந்த இராகத்தை நான் பாடிக்கொண்டு இருக்க வேண்டுமென்று உனக்கு அவ்வள்வு ஆசையா?"

"அந்த இராகத்தையாவது நீங்க சரியாகப் பாடிக் கேட்க வேண்டுமென்று ஆசை...!"

"அவ்வளவு தான்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நல்லூர் பிரதேச சபைக்கு தேசியகீதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை தமக்கான கீதம் ஒன்றினை இயற்றுவதற்கு தீர்மானித்துள்ளது. இதில் ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 300 | 330 | 300 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 30 | 60 | 60 |
| கரட் | 80 | 140 | 120 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 35 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 |
| பாகற்காய் | 150 | 160 | 170 |
| வெண்டிக்காய் | 25 | 30 | 40 |
| கரணைக்கிழங்கு | 70 | 60 | 100 |
| பயற்றங்காய் | 70 | 60 | 150 |
| லீக்ஸ் | 35 | 40 | 60 |
| பீற்றூட் | 15 | 30 | 30 |
| கறிமிளகாய் | -- | 120 | 150 |
| முருங்கைக்காய் | 70 | 60 | 90 |
| போஞ்சி | -- | 140 | 160 |
| கத்தரி தம்புள்ள | -- | 40 | 70 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 |

# நன்றி கூறல்



நகர அபிவிருத்திக்கு இடையூறாக இருக்கும் தடைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து முதலீடு செய்ய விரும்பி நாடு திரும்பும் மக்களுக்கு முதுகெலும்பாக இருந்து ஊக்குவிக்கும் மாண்புமிகு அமைச்சருக்கும் பெருமைக்குரிய முதல்வருக்கும் நேரமற்று பல இடையூறுகளின் மத்தியில் மக்களுக்கு சேவை செய்யும் இவர்கள் தனிப்பட்ட முறையில் நான் விடுத்த கோரிக்கைக்கு மனம் கோணாது விடுமுறை தினம் என்றும் பார்க்காமல் எமது கிளை நிறுவனமாகிய மூன்று நட்சத்திர விடுதியினை அமைப்பதற்கு அடிக்கல் நாட்ட நேற்றைய தினம் சனிக்கிழமை (19.11.2011) அமைச்சர் மற்றும் முதல்வர் தங்கள் பொன்னான நேரத்தை எங்களுக்காக ஒதுக்கி அதிகாலை 6 மணிக்கு அடிக்கல் நாட்டி எங்களை வாழ்த்தி உற்சாகப்படுத்தி அறிவுரை கூறி நம்பிக்கை ஊட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் எமது யாழ். முதல்வருக்கும் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஓடுபவனுக்கும் பாடுபவனுக்கும் உற்சாகப்படுத்தும் உயிர் சத்து கரகோசம் மட்டுமே என்பதை புரியாத ஆதங்க நாயகர்களுக்கு எதிராக ஊக்குவிப்புத் தன்மையை மனதில் கொண்டு கைகுலுக்கி கரகோசம் எழுப்பி நாம் பேசுவதைக் கேட்டு உற்சாக உயிர் சத்து வழங்கும் அண்ணன் என்றும் தலைவன் என்றும் ஐயா என்று நம்மால் அழைக்கப்படும் நமது கலை, கலாசாரத்தையும் தெரிந்து எமக்கு தெரியாததையும் புரியவைத்து ஆஸ்தான முறைப்படி நமது முதல்வருடன் சேர்ந்து நடாத்திய அடிக்கல் நாட்டும் நிகழ்வு என்றும் எப்போதும் மறக்க முடியாதது என்பதை மீண்டும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ACTIF
Actif Hotels & Tourism
★★★ Lux Etoiles
No. 34, Chetty Street Lane, Nallur, Jaffna
Tel : 021 222 3966 Fax :021 222 0606
www.luxetoiles.com

கிளை:-

ACTIF
Actif Hotels & Tourism
Anish Park
No. 109, Upper Lake Road, Nosby House, Nuwaraeliya.
Tel : 052 222 3966 Fax : 052 222 3033
www.anishhotel.com

(6829)

# ஆறு புதிய ரயில் பாதைகளை அமைப்பதற்கு நடவடிக்கை

## போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய புகையிரதப் பாதைகள் அமைக்கும நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் இதற்கு வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலும் பாணந்துறையில் இருந்தும் ஹொரனை வரையிலும் மாகோவிலிருந்து திருகோணமலை வரையிலும் மதவாச்சியில் இருந்து திருகோணமலை வரையிலும் புதிய ரயில் பாதைகள் அமைக்கப்படவுள்ளதாக புகையிரத அதிகாரி வீ.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

குருநாகலிலிருந்து ஹபரண ஊடாக தம்புள்ள வரைக்கும் வெல்லவாயவிலிருந்து பிபிலை ஊடாக பதுளை வரைக்கும் மேலும் இரு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்த புகையிரத அதிகாரி,

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, பிரதியமைச்சர் ரோஹன குமார ஆகியோரின் ஆலோசனைகளின் பேரில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ-2)

# வரவு-செலவு திட்டத்தில் வேதன அதிகரிப்பை எதிர்பார்க்கக்கூடாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்டத்தில் வெறுமனே வேதன அதிகரிப்பை மாத்திரம் எதிர்பார்க்கக் கூடாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கும் போது அனைவரும் வேதன அதிகரிப்பினையே எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் வரவு-செலவுத்திட்டம் என்பது வேதனங்களை அதிகரிக்கும் திட்டம் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதில் பல்வேறு கிராமங்களுக்கும் நகரங்களுக்குமான அபிவிருத்தி பணிகளுக்கு நிதி பங்கீடு செய்யப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வேதன அதிகரிப்பை எதிர்பார்க்க வேண்டாம் எனவும் அபிவிருத்தி பணிகளுக்காக பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# வடபகுதி சிறார்களின் குறைந்த போஷாக்கு நிலையில் துரித வீழ்ச்சி

## ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள சிறார்களின் குறைந்த போஷாக்கு நிலையில் துரித வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வு நிலையம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

அந்தப் பிரதேசத்திலுள்ள ஐந்து வயதுக்கு குறைவான பிள்ளைகளின் குறை போஷாக்கு நிலைமை 1.5 இலிருந்து 0.3 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது என மருத்துவ ஆய்வு நிலையத்தின் தலைவர் டாக்டர் ரேணுகா ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் உள்ளிட்ட சில அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட போஷாக்கு நலத் திட்டங்களே இதற்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதுதவிர வடபகுதி சிறுவர்களுக்கு தொற்றக்கூடிய நோய்கள் மற்றும் உணவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பராமரிப்பு திட்டங்களில் எதிர்பார்த்தளவு அனுகூலங்கள் கிடைத்து வருவதாக அவர் கூறினார். (அ-2)

# விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கையா?

## அரசை விமர்சிக்கின்றது பங்காளிக் கட்சி

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டை முன்வைத்து விமர்சித்துள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை நிறுத்த இலங்கையின் நிதியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அந்தக் கட்சியின் அரசியல் துறை உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

விவசாயிகளுக்கான ஓய்வூதிய திட்டத்தை முன்னெடுத்து செல்ல நிதியில்லை என்ற காரணத்தினால் அந்தத் திட்டம் நிறுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை நிதியமைச்சின் சில அதிகாரிகள் பொருளாதார சீராக்கம் என்று கூறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 1987 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட இந்த திட்டத்துக்கு விவசாயி ஒருவர் 200 ரூபாவை செலுத்தி வருகின்றார்.

அது பின்னர், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ஆட்சிக் காலத்தில் 500 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்காவின் காலத்தில் அந்த தொகை ஆயிரம் ரூபாவாக்கப்பட்டது. எனினும் இந்த கொடுப்பனவுகள் உரிய நடைமுறைகள் இன்றி பிரச்சினைக்குள் சிக்கியுள்ளதாக பியசிறி குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)


# தேவகுஞ்சரிக்கு எமது அஞ்சலி



திருமதி

## பரம்சோதி தேவகுஞ்சரி

*கண்ணிலே நீர் கலங்கி நிற்கின்றோம்*
*காணவில்லை உன் திருமுகத்தை*
*மண்ணிலே நீ நடந்த வழித்தடத்தை*
*மாயமாய் மறைத்தது யார் மன்னவனே*
*கண்ணிமைப் பொழுதினில் உனைப் பிரிவோமென்று*
*கனவிலும் நாம் காணவில்லை என் செய்வோம்*
*விண்ணிலே உனக்கழைப்பு விரைந்து வந்ததுவோ*
*விதியாமோ! அறியாமே தேவகுஞ்சரியே*


ஆத்மா சாந்திக்காக எல்லாம்வல்ல ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**இயக்குநரும் / நிர்வாகத்தினரும், ஊழியர்களும்.**
**ஈஸ்வரன் ரேடர்ஸ்,**
**ஈஸ்வரன் ரேடிங் கம்பனி,**
**ஈஸ்வரன் டிரான்ஸ்போர்ட்,**
**ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ்,**
**ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ் கூரியர் சேவிஸ்.**

(சி-5006)

# தெற்கு சீன கடற்பகுதியில் சர்வதேச விதிமுறைகளை மதிக்க வேண்டும்

## பிரதமர் மன்மோகன் சீனாவிடம் வேண்டுகோள்



தெற்கு சீன கடல் பகுதியில் சர்வதேச சட்ட விதிமுறைகளை சீனா மதிக்க வேண்டும் என்று, சீன பிரதமரை சந்தித்தபோது மன்மோகன் சிங் வற்புறுத்தினார்.

இந்தோனேசியா நாட்டில் உள்ள பாலி தீவில் இந்தியா-தென் கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் 9ஆவது மாநாடும், கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் 6ஆவது மாநாடும் நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்திய பிரதமர் மன்மோகன்சிங், சீன பிரதமர் வென் ஜியாபோ, கம்போடியா பிரதமர் ஹுன்சென் மற்றும் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

நேற்று முன்தினம் சீனப் பிரதமர் வென் ஜியோபோவை, பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து பேசினார். இருவரும் இந்தியா-சீனா மற்றும் சர்வதேச பிரச்சினைகள் பற்றி 55 நிமிடங்கள் பேசினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, மன்மோகன் சிங் வரவேற்று பேசுகையில், இந்தியாவும், சீனாவும் நல்லுறவு கொண்டு உள்ளன. கடந்த ஆண்டு சீன பிரதமர் இந்தியா வந்த போது இந்த உறவு மேலும் பலமானது.

இரு நாடுகளும் வளர்ச்சி அடைவதில் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

அவர் மேலும் தெற்கு சீன கடல் பகுதியில் சர்வதேச சட்ட விதிமுறைகளை சீனா மதித்து அதை கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சீனப் பிரதமர் பேசுகையில், 21ஆவது நூற்றாண்டு ஆசிய நாடுகளின் வளர்ச்சி நூற்றாண்டாக அமைய வேண்டும். இதற்கு இந்தியாவும், சீனாவும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்பதை உணர்கிறோம். இந்தியாவும், சீனாவும் சேர்ந்தால் உலக நாடுகளைக் கூட முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்று குறிப்பிட்டார்.

இந்தியா-சீனா இடையே வர்த்தகத்தை எதிர்வரும் 2015ஆம் ஆண்டுக்குள் ரூ.50 ஆயிரம் கோடியாக உயர்த்த நடவடிக்கை எடுப்பது என்றும், இரு நாட்டு மக்கள் இடையேவும் நல்ல உறவு ஏற்பட வழிவகை செய்ய வேண்டும் என்றும் முடிபு செய்யப்பட்டது.

தெற்கு சீன கடல் பகுதியில் இந்தியாவும், வியட்னாமும் சேர்ந்து கடலுக்கு கீழ் இருந்து கச்சா எண்ணெய் எடுக்கும் பணியை ஆய்வு செய்து வருகிறது. இதில் முழுக்க முழுக்க வியாபார தொடர்பு மட்டுமே இருக்கிறது. இதைத்தவிர இதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை.

எனவே, தெற்கு சீன கடல் பகுதியில் சர்வதேச விதிமுறைகளை சீனா மதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறோம். அந்த கடல் பகுதியில் கப்பல் போக்குவரத்தையும் சீனா தடுக்கக் கூடாது. இதை சீனா உறுதிப்படுத்த வேண்டும்.

### எல்லையில் அத்துமீறல்கள்

இந்தியா- சீனா எல்லைப்பகுதியில் அடிக்கடி நடைபெறும் இராணுவ அத்துமீறல்கள் பற்றியும் இருநாட்டு தலைவர்களும் பேசினார்கள். தற்போது சீனாவின் அத்துமீறும் செயல்கள் குறைந்து இருக்கின்றன.

இந்திய இராணுவத்தின் அத்துமீறல்கள் பற்றியும் சீன பிரதமர் சுட்டிக்காட்டி இருக்கிறார். இது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறி இருக்கின்றோம் என்றார். (அ-2)

## இரும்புக்கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் டெங்கு கட்டுப்பாடு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத் தின் கீழ் பிளாஸ்ரிக்,கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் இரும்புகள் கொள்ளவனவு செய்யப்படவுள்ளன.

மேற்படி கொள்வனவு செயற்பாடு காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை உப அலுவகத்தில் கொள்வனவு செய்யப்படும் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் பிளாஸ்ரிக் ஒரு கிலோ 10 ரூபாக்கும் கண்ணாடிப் போத்தல்கள், பிசுங்கான்கள் ஒரு கிலோ 2 ரூபா 50 சதமும், இரும்புத் தகரம் என்பன ஒரு கிலோ 20 ரூபா வுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# முதலீட்டாளர்கள் சீரானமுறையில் முதலீடு செய்ய வேண்டும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



முதலீட்டாளர்கள் நல்ல முறையில் தமது முதலீட்டினை ஈடுபடுத்த வேண்டும்.அதைவிடுத்து இழிநிலையில் விடுதிகளை நடத்துவது தவிர்க்கப்படவேண்டும் என யாழ்.அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அரச இணையங்கள் சந்தையில் பொதுமக்களின் முதலீடு சம்பந்தமாக செக்குறீட்டீஸ் லிமிட்டெட் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடத்திய முதலீட்டாளர் கருத்தரங்கிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் முதலீடுகளை ஈடுபடுத்துவதற்கு கணிசமான முதலீட்டாளர்கள்இருக்கின்ற போதும் யாழ்ப்பாணத்தின் இன்றைய அபிவிருத்திக்கேற்ப பிணை முறிகள் காணப்படவில்லை .

11 நிறுவனங்கள் அரச பிணை முறிகளை பதிவு செய்வதற்காக மத்திய வங்கியிடம் பதிவு செய்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முதலீடு என்று கொள்வனவு செய்யும் போது போதிய அறிவு இல்லாமல் செய்கின்றனர்.வவுனியாவில் பலகோடி ரூபா பணம் சீட்டு என்ற பெயரில் மக்களின் பணத்தினை கொள்ளையடித்தனர். இதில் பாதிக்கப்பட்டவர்கள் தற்கொலை செய்யும் அளவிற்குக்கூட சென்றுள்ளனர்.

யாழ்ப்பாண மக்கள் மிகவும் நேர்மையானவர்கள், விசுவாசமானவர்கள், நம்பிக்கையுடையவர்கள் என்பதால் முதலீட்டு நிறுவனங்கள் யாழ்.மாவட்டத்தில் முதலீடுகளை ஈடுபடுத்துவதற்கு முன்வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் கௌரிசங்கர்,பிரதி முகாமையாளர் கேரத்,நிறைவேற்று அதிகாரி டயஸ் மற்றும் வங்கியியளாளர்கள் , முதலிட்டாளர்கள் போன்றோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதியை முழுமையாக நம்புகிறேன் எமக்கான தீர்வை அவர் பெற்றுத்தருவார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டை தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வினை பெற்றுத் தரக்கூடிய ஆண்டாக மாற்ற வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சமய நிறுவனங்களை மேம்படுத்தல் மற்றும் ஆன்மீக வளர்ச்சி தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள இந்து ஆலய புனரமைப்புக்கான நிதி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமயத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஆலயங்களை புனரமைப்பதற்கான புத்தசாசணம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் காசோலை வழங்கப்படுகின்றது.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் உள்ள இந்து ஆலயங்கள் ஏனைய மதத்தலங்களும் பிரதமரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தில் இந்து சமய விவகார அமைச்சினால் கடந்த காலங்களில் பாரியளவு நிதி ஆலயப் புனரமைப்புக்கென வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் காலத்திலும் ஆலயப் புனரமைப்புக்கு நிதி வழங்கப்பட்டது.அண்மையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள இந்து ஆலய புனரமைப்புக்காக நிதி வழங்கப்பட்டது. தற்போது கிளிநொச்சி மற்றும் யாழ். மாவ ட்டத்திலுள்ள 214 இந்து ஆலயங்களுக்கு நிதி வழங்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திற்கு தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் வருகை தரும்போது கடந்த காலங்களில் எதிர்ப்புக்கள் காட்டப்பட்டன.

ஆனால், தற்போது அவர்களை அன்புடன் வரவேற்கும் நிலை காணப்படுகின்றது. இந்த ஒற்றுமை நாட்டில் தொடர்ந்து இருக்கவேண்டும். அடுத்த ஆண்டை பிரச்சினைக்கு முழுமையான தீர்வைத் தரக்கூடிய ஆண்டாக தமிழர்கள் மாற்றவேண்டும்.

இந்தப் பேச்சு வெறும் மேடைப் பேச்சாக மட்டும் நின்றுவிடாமல் ஜனாதிபதியை நான் முழுமையாக நம்புகின்றேன். அவர் தமிழர்களுக்கான தீர்வுத்திட்டத்தை வென்று தருவார் என்று நம்பிக்கை உண்டு.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் தற்போது சரியான முடிபுக்கு வந்துள்ளனர் என்பதை பத்திரிகைகளில் விடப்பட்டிருந்த அறிக்கைகளில் இருந்து அறிந்துள்ளோம். எனவே, அடுத்த ஆண்டை தமிழர்களுக்கு உரிய தீர்வினை பெற்றுத் தரக்கூடிய ஆண்டாக மாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)


தண்ணீர் அஞ்சலி

கந்தையா இராசையா



எமது அன்பிற்குரிய சகோதரன்
**திரு.இ.சிவகுமார் (லண்டன்)**
அவர்களின் அன்புத் தந்தையும்
**பேராசிரியர் க.தேவராஜா**
அவர்களின் அன்பு மாமனுமாகிய
**உயர்திரு. கந்தையா இராசையா**
(ஸ்தாபகர் K.R.S நிறுவனம் கொழும்பு)
அவர்களின் மறைவுச் செய்தி
அறிந்து துயரமடைவதுடன் அவரின்
மறைவால் துயரும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்து அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**உறவுகள்.**

## தபால் திணைக்கள பிரச்சினைகள் விவகாரம் க.பொ.த.(சா/த) மாணவர்களையும் பாதிக்கும்

### ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படாமையால் சுமார் 23 இலட்சம் கடிதங்கள் தேங்கியுள்ளன. இந்நிலை தொடருமானால் நடைபெற உள்ள க.பொ.த (சா/த) தர பரீட்சைக்கும் பாதிப்புகள் ஏற்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

ஐதேக வெளியிட்டவிசேடஅறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தபால் துறைசார் பிரச்சினைகளில் அரசு பொறுப்பற்றவாறு செயற்படுகின்றது. இதனால் 23 இலட்சத்திற்கும் அதிகமான கடிதங்கள் தபால் நிலையங்களில் தேங்கிப் போயுள்ளன.

அடுத்த மாதம் க.பொ.த.சாதாரணப் பரீட்சை நடைபெறவுள்ளது. இதற்கான அடையாள அட்டைகள் மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் என்பன தாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு தபால் ஊழியர் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்த வேண்டும். (அ-2)

## சாதாரண தர மாணவர்களின் பாடத் தெரிவில் மாற்றம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தின் பாடத் தெரிவுகளை இல்லாது செய்ய விருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கல்வி அறிவின் அபிவிருத்தி நோக்கில் கல்வி முறைமையில் சீர்திருத்தம் மேற்கொள்வதை பிற்போட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது உள்ளதைப் போலவே தாய் மொழி, கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஆறு பாடங்கள் அத்தியாவசிய பாடங்களாக இருக்கும்.

எனினும் அதற்கு மேலாக தெரிவு செய்யப்படும் பாடங்களில் பொதுவாக மாணவர்கள் இலகுவாக பாடங்களை தெரிவு செய்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த நிலைமையை மாற்றி தெரிவு முறையை இல்லாது செய்து பௌதீகவியல், இரசாயனவியல் போன்ற பாடங்கள் சாதாரண தரத்துக்கு கட்டாயப்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## அதிகாரப் பகிர்வை வழங்க இடமளிக்கமாட்டோம்

### குணதாச அமரசேகர ஆதங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதை கடுமையாக எதிர்ப்பதாகவும் இதனை கைவிட வேண்டும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இந்தியாவிற்கு அடி பணிந்ததாலேயே எமது நாடு சீரழிந்தது என்றும் அவர் கூறினார்.

அதிகார பரவலாக்கல் தொடர்பாக கூட்டமைப்புடன் பேசத் தயாரென அரசாங்கம் தெரிவித்துள்ளமை தொடர்பாக கேட்டபோதே டாக்டர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 60 ஆயிரம் படையினர் தமது உயிர்களை பலி கொடுத்து பிரிவினைவாத பயங்கரவாதத்தை ஒழித்தனர். ஆனால், அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது படையினன் உயிர் தியாகத்தை கொச்சைப்படுத்தும் செயற்பாடாகும்.

அத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள மக்கள் ஆணை வழங்கவில்லை. எனவே உடனடியாக அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும்.

மக்கள் ஆணையை அரசாங்கம் மீறுமானால் நாம் மக்களை வீதியில் இறக்கி போராடுவோம். அதிகாரப் பரவலாக்கலுக்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்றார். (அ)

## விசமிகளால் பெயர்ப்பலகை உடைப்பு சிரமத்தில் மக்கள் தவிப்பு



(நவாலி)

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையானது ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலுக்கு முன்பாக உள்ள வீதியில் இயங்கி வருகின்றது.


இவ்வைத்தியசாலை கடந்த 2008 ஆம் ஆண்டு திறக்கப்பட்டபோது, தனியார் வர்த்தகர் ஒருவரினால் அவரின் தந்தையாரின் ஞாபகார்த்தமாக மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை வீதி என பெயர் பொறிக்கப்பட்ட கல் நாட்டப்பட்டது.

நாட்டப்படிருந்த இக்கல் அண்மையில் சில விஷமிகளால் உடைத்து நொருக்கப்பட்டுள்ளது. எனவே இவ் வைத்தியசாலைக்கு புதிதாக வரும் நோயாளிகள் வைத்தி யசாலையை இனங்கான முடியாது கஷ்டப்படுவதினை அவதானிக்க முடிகின்றது. எனவே இவ்வீதிக்கு உரியதரப்பினர் புதிய பெயர்ப் பலகையை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-26)

## மரண அறிவித்தல்

## கந்தையா இராசையா



துரைவீதி- கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், சுன்னாகம் விநாயகர் அரிசி ஆலையின் உரிமையாளரும், K.R.S நிறுவனத்தின் ஸ்தாபகரும் இல, 35/2, எலிபாங் வீதி, கொழும்பு-05 ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா அவர்கள் 16.11.2011 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா- செல்லாச்சி தம்பதியினரின் அருமை மகனும், இளையதம்பி-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், பூமணி, சிவலோகநாதன் (Rasam Rice Mill, K.R.S. Food Products, K.R. Sivaloganathan & Co.), சச்சிதானந்தம் (Canada), இராணி, இலக்சுமிதேவி, கையிலாயபிள்ளை (சிறீ -International Marketing Center, Hitech Marketing K.R.S. Trades Center), சிவஞானசுந்தரம் (சிவா - Internationnal Marketing Center, K.R. Sivaloganathan & Co.), விக்கினேஸ்வரன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற சபா, சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய வெளிநாட்டு தொலைத்தொடர்பு அத்தியட்சர் ), Dr. மகாதேவன் (யாழ். போதனா வைத்தியசாலை), தேவராஜா (பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்), இராஜதேவி, ஹேமலதா (கனடா), பாமதி, அமுதா, தசிந்தா (லண்டன்), கலாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2011 இன்று கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் (35/2, எலிபாங் வீதி, கொழும்பு -05) காலை 8.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தகனத்திற் காக அவரது பூதவுடல் 10.00 மணியளவில் பொரளையிலுள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

35/2, எலிபாங் வீதி,
கொழும்பு-05.
T.P.:-2582783, 0777808822

தகவல்:- சிறீ

(சி-4997)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### நான் அழ வேண்டும்

வானம் அழுது கொண்டிருந்தது
வையத்தை வாழ வைத்துக்கொண்டு
கானம் பாடி கவிக்குயில்கள்
களிப்படைந்து சிலிர்த்துக் கொண்டன...

எனக்கு அழவேண்டியிருந்தது–அதனால்
ஆவலோடு நனையத் தொடங்கினேன்
கனக்கும் இதயச்சுமைகளை அப்படியே
கண்ணீரோடு கரைவது போலிருந்தது...

தப்புகள் பல செய்யவேண்டும்
தப்பிக்கவும் வேண்டும்...
தட்டி யாரும் கேட்க வந்தால்
தாறுமாறாக... போட வேண்டும்

நான் மட்டும் அப்படியிருந்தால்
நாட்டிற்கு அவ்வளவு கேடில்லை...
நாடே அப்படியானால்
நல்லவன் பாடெப்படியிருக்கும்...?

நான் அழவேண்டும்...
மற்றவர் முன் சிரித்துக் கொண்டு
நான் அழத்தான் வேண்டும்
மழையே நீ ஓய்ந்திடாதே

இ.தனஞ்சயன்
கொக்குவில்.

### கிடைக்காத சுதந்திரம்

கற்ற கல்வி உனக்கு
உற்ற தோழியாயிருக்கு!
நெஞ்சிலே துணிவிருக்கு
வஞ்சியே வலி எதற்கு!
உண்மையும் நேர்மையும்
உள் உள்ளத்திலிருக்கு
என் கண்ணேயுன்னை
காலில் மிதிக்கும் உறவெதற்கு!
வாழும் வழிகள் பலவிருக்கு
வாழ்ந்து காட்டு உலகினுக்கு
நம்பிக்கை எனும் விளக்கிருக்கு

த.கேமா
கொக்குவில்

### கல்வி

கற்ற கல்வி உனக்கு
உற்ற தோழியாய் இருக்கு!
நெஞ்சிலே துணிவிருக்கு
வஞ்சியே வலி எதற்கு!

உண்மையும் நேர்மையும்
உன் உள்ளத்திலிருக்கு
என் கண்ணே உன்னை
காலில் மிதிக்கும் உறவெதற்கு!

வாழும் வழிகள்பலவிருக்கு
வாழ்ந்து காட்டு உலகினுக்கு
நம்பிக்கை எனும் விளக்கிருக்கு

பா.மதனபாரதி
அல்வாய்

### அவரவர் பார்வையில்

நட்பு
காற்றும் இசையாகும்
நாம் வாசித்தால்
வார்த்தைகள் கவிதையாகும்
நாம் யோசித்தால்
இந்த உலகமே நட்பாகும்
நாம் நேசித்தால்
காதல்
நினைவில் வைத்து
கனவு காண்பதல்ல
காதல் மனதில் வைத்து
மரணம் வரை தொடர்வதுதான்
உண்மையான காதல்
கவிதை
கற்பனைகளின் விருட்சம்
கனவுகளின் சிகரம்
காதலின் மொழி
கனவு
தூக்கத்தின் போது
கண்கள் இரண்டும் காணும்
கட்டணமற்ற காட்சி
அன்பு
அன்பு யார் மீதும் காட்டமுடியும்- ஆனால்
கோபம் உயிருக்கு மேலான
உரிமை உள்ளவர்களுக்கு
மட்டுமே காட்டமுடியும்

எஸ்.நிறோ

### நட்பு

எனக்குப் பிடித்த நீயும்
உனக்கும் பிடித்த நானும்
நமக்கும் பிடித்த காதலும்
யாவருக்கும் பிடிக்காததால்
என்னைப் பிரிந்து நீயும்
உன்னைப் பிரிந்து நானும்
நம்மைப் பிரிந்து காதலும்
தவிக்கும் தவிப்பு
யாருக்கு இங்கு புரியும்

கு.நித்தியா
மடத்தடி

### பூண்டோடு ஒழிப்பதற்கு

பனை மரத் தோப்பினிலே
சுழியோடி கரைந்துரைந்து
வலு சுமந்த மேனியரை
கிலி கொள்ளச் செய்த
ஆறாவது பூதம்
அரங்கேறி அகன்றுவிட
ஏழாவது பூதம்
பவுடர் எனும் பேரில்
பவனி வருகின்றதே
கற்றவரே பெற்றோரே
எம் இனத்தின் காவலரே
பொறுத்திட வேண்டாம்
பொங்கி எழுந்திடுவீர்
போதைப்பொருளதனை
பூண்டோடு ஒழிப்பதற்கு

ந.சந்திரலிங்கம்
அச்சுவேலி

### இமயம் தொட...


எங்கே நீ செல்லும் போதும்
உன்னுடன் வரவேண்டியது
நம்பிக்கையே
உதிர்ந்து சருகான பின்பும்
நம்பிக்கை ஒளிர்ந்தால்
துளிர் விடுவாய்
உனக்குள் உருவாகும்
நம்பிக்கைத் துளிகளில்
உலகைத் தூக்கி நிறுத்து
நீ புது மனிதன்

மாவை நா.கஜேந்திரன்

### உடைந்த கனாக்கள்

கடவுளே
பூக்களைக் கொடுத்து
உம்மிடம்
எதை வாங்குகிறோம்
உமக்காக செடிகள்
காயப்படுகின்றனவே...
சுதந்திரம்
இதைக் கழற்றிவிட்டு
வாழச் சொல்கிறது
வன்முறை
மனித எச்சங்களுடனும்
மண்டையோடுகளுடனும்....!
மழையில் நனையாமல்
குடையைப் பிடித்துவிட்டாய்
குடைக்குள் நின்று கொண்டு
கண்ணீரால்
நனைத்துக் கொள்கிறாயோ...?

செ.மோனக்ராஜ்
நெடுந்தீவு-12



## மௌனத்தின் தேடல் – 97

### நாளைய அழுகைக்கு...

இன்றைய உன் சிரிப்பு
நாளைய அழுகைக்கு ஆரம்பம்
என்பதைத் தெரிந்துதான்
சிரிக்கின்றாயா மனிதா...
இதுதான் வரலாறு என்பதை
தெரிந்த பின்...
தொடரையா உன் சிரிப்பை

வ.ச. செல்வராசா
திருநாவலூர்

### தோற்றம்

உணவைக் கண்டு சிரிக்கின்றானா?
இல்லை நிம்மதியில்லையென்று
அழுகின்றானா?
ஆனால் சாவைக் கண்டு பயப்படான்
ஏனெனில் பழகிவிட்டது

செ.சுகிபன்
இணுவில்.

### முகம்

ஆடி அடங்கும் நேரத்தில்- உன்
அகத்தின் அழகு...
முகத்தில் தெரியுது ஐயா...!
அதிகாரத்திலிலுருக்கும் போது...
ஆணவத்துடன் அதர்மம்...
செய்த உனக்கு
ஆண்டவனால் தண்டிக்கப்பட்ட
முகமா இது...?

சி.வீ.அருள்ராஜன்
கம்பர்மலை

### புரியவில்லை

கொலைக்களமாய்
காணப்படும்
இந்நரக பூமியில்
புரியாமல் தவிக்கிறேன்
உம் உணர்வின்
வெளிப்பாட்டை

ச.அஜந்தா
பொலிகண்டி

### எது

போரின் வடுவா?
போதையின் பாதையா?
ஏழ்மையின் ஏக்கமா?
எழுந்து நில் ஒரு மனிதனாய்
நாளைய சந்ததிக்கு
நல்வழிகாட்டியாக

ச.தீபன்
மயிலங்காடு

### சிரிப்பு

உலகில் வாழும் ஜீவராசிகளில்
சிரிக்கத் தெரிந்தது
இந்த மனித இனம் மட்டுமே

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை.

### புன்னகை

அழகு அழகென்று
அங்கலாய்த்து
அவதியுறும் மானிடமே!
அவலட்சணம் என்று
அவமதியாதீர்- அங்கே
அன்பு புன்னகை காண்பீர்!

கே.ரஞ்சித் விஜயகுமார்,
யாழ்ப்பாணம்.

### விட்டில்பூச்சி

ஏய் மனிதா!
உன் நகைப்பிற்குக் காரணம்
மதுவிற்கு அடிமையாகி
சீரழிந்துபோன- உன்
வாழ்க்கையை நினைத்தா

நெய்தல்
தேன்மொழி

### சாவுக்குள் சந்தோசம்

வாழ வழி தெரியவில்லை
இனி இழப்பதற்கு ஏதுமில்லை
அதனால் சாவைக்கூட
சந்தோசத்துடன்
ஏற்றுக்கொண்டேன்

அ.புவனா
கறுக்காய்

### வேண்டாம் இப்பிறவி

ஐயகோ பரிதாபம்
எங்கும் அவலக்குரல்
ஏனடா மானிடா
இப்பிறவி உனக்கு
முதுமையிலும் கிடைக்கவில்லையோ
நிம்மதி உனக்கு

வி.கே.அமுதஜீ
இமையாணன்.

### வறுமை

தேய்கின்ற பிறைபோல
துன்பத்தின் சிரிப்பில்
தோய்கின்ற கவலையும்
அனைத்தையும் இழந்த
மனநோயின் வெளிப்பாடு
வறுமையின் கொடுமை

க. அபர்ணா
வட்டுக்கோட்டை

### அடைக்கலம்

கைகொடுத்த சொந்தம் இன்று
கைவிட்டதை நினைத்து
கலங்கிடாதே ஐயா...!
அடைக்கலம் தந்திடும் தாயவளான
காப்பகத்திற்கு விரைந்திடுவீர்
அவள் தோள்கொடுத்து வரவேற்பாள்
மழலைச் செல்வத்தைப்போல்

அ.துசாந்தினி
கொம்மாந்தறை

### யுத்தத்தின் விளைவு

வறண்டு போன உனது முகம்
வாரமுடியாத உனது தலைமுடி
சவரம் செய்யாத உனது தாடி
காவி பிடித்த உனது பற்கள்
கள்ளமில்லா உனது சிரிப்பு
கல்லாகிப்போன உனது உணர்வு
இவையெல்லாம் யுத்தத்தின் விளைவு

அ.மேரி அல்போன்சா
குருநகர்

### நான் அவன்

பேரினவாதப் பூதம் நான்
பெரும் சாதனை செய்துவிட்டேன்
சந்தியில் சண்டைகள் போட விட்டேன்
சாராயக் கடைகளில் குந்தவைத்தேன்
போதைப்பொருளிலும் புரள வைத்தேன்
பேதைப்பெண்ணோடு விடுதியில்...?
தமிழ்தேசத்தை அழித்துவிட துணிந்து விட்டேன்
தலைமை இல்லா இனம் என்று கண்டுவிட்டேன்

இந்திரஜித்தன்.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 98



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 25.11.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# சாதாரணத்திலிருந்து மிக சாதாரணத்திற்கு



ஆன்மீகம் 01

ஒரு நாள் தெனாலிராமன் சில ரோடு அமர்ந்து தத்துவவிடயங்களை பேசிக்கொண்டிருந்தார். அதில் ஒருவர் மட்டும் கூட்டத்தில் உட்காராமல் சற்றுத்தள்ளி உட்கார்ந்து கொண்டு சம்பந்தமில்லாமல் விமர்சித்துக்கொண்டே இருந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த தெனாலிராமனால், பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே அவர், “நீ ஒரு முட்டாள் ஒன்றுக்கும் ஆகாத ஆள் நீ, ஒரு பூச்சியம்” என்று அவரைப் பார்த்து சொன்னார். இதை மிகவும் அவமானமாகக் கருதிய அந்த மனிதர் “நானொரு பூச்சியம் என்று எப்படிச் சொல்கிறாய்?” என்று கேட்டார். அப்போதும் தெனாலிராமன் “ஆமாம் நீ உண்மையிலேயே ஒரு பூச்சியம்தான்” என்று சொல்ல, மிகவும் கோபமுற்ற அந்த மனிதர் “அப்படிச் சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம். இந்த நகரில் நான்தான் அனைவருக்கும் செருப்புத் தைத்துத் தருகிறேன் தெரியுமா உனக்கு?” என்று கேட்டார். உடனே தெனாலிராமன் தன் செருப்பை எடுத்து அதைப்பிய்த்தெறிந்து அவரது கைகளில் திணித்துவிட்டுச் சென்றார். “நீ செருப்புத் தைப்பவன் என்றால், இதை ஒரு புதுச்செருப்புப் போல செய்து தா?” என்று சொல்ல அவர் அவற்றை எடுத்துக் கொண்டு சரிசெய்யச் சென்றார். எனவே அறியாமை என்பது பல அடுக்குகளாக, பல எல்லைகளாகத்தான் எப்போதும் உள்ளது. ஒரு செருப்புத் தைப்பவராக நீங்கள் இருக்கும்போது உங்களை ஒரு பூச்சியம் என்று சொன்னால், அது ஒரு அவமானம்தான். ஆனால், உண்மையிலேயே தியாத்தன்மையில் இருப்பவர்களுக்கு அது பொருத்தமானதாக இருக்கும். வாழ்க்கை எப்போதுமே. அப்படித்தான் இருக்கிறது; எப்போதும் அப்படித்தான் இருக்கும். வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு விடயங்கள் புதிராக இருக்கின்றன. நமது அறியாமையின் எல்லைகள் வேண்டுமானால், காலப்போக்கில் அதிகரிக்கலாம். இந்தப்பூமியில் இலட்சக் கணக்கான ஆண்டுகால மனிதகுல வளர்ச்சியில் நமது மூளையின் செயற்பாடு நிச்சயமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அறிவுத்திறனும் புரிதலும் அதிகரித்துள்ளன. இப்படிப்பட்ட வளர்ச்சி நடந்திருந்தாலும். வாழ்க்கை என்பது மேலும் மேலும் புதிராகத்தான் இருக்கிறது. எந்த அளவிலும் அது குறைந்தபாடில்லை.

ஒரு வேளை ஒரு ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இந்த உடல் எப்படி இயங்குகிறது என்பதை நாம் அறியாமல் இருக்கலாம் ஆனால், இன்று நாம் உடலைத் திறந்து பார்த்து உள்ளே பலவற்றைச் செய்கிறோம். இதைப் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சிக்கையில் இதற்கு முன்னர் இல்லாத அளவிற்கு மேலும்மேலும் புதிர்கள் அதிகமாகிக் கொண்டுதான் போகின்றன. ஆயிரம் வருடங்களுக்கு முன்னால், நீங்கள் வானத்தை அண்ணார்ந்து பார்த்தால், ஐந்தாயிரம், பத்தாயிரம் நட்சத்திரங்களை வெறுங்கண்களால் எண்ணியிருக்க முடியும். இன்று மிகவும் சக்தி வாய்ந்த தொலை நோக்கிகளை வைத்திருக்கிறோம். அதைக் கொண்டு வெறும் கண்களால் பார்ப்பதையும் விட அதிகமாகப்பார்க்க முடியும். இலட்சக் கணக்கான நட்சத்திரங்கள் இருப்பது இப்போது நமக்குத் தெரியும். பார்க்கப் பார்க்க நமக்கு இன்னமும் புதிராகவும் சிக்கலாகவும் தான் உள்ளது. உங்கள் புரிதல் அதிகரிக்க அதிகரிக்க அவை மேலும் மேலும் புதிராகத்தான் உள்ளன.

விஞ்ஞானம் உங்கள் வாழ்வில் தெளிவைத்தர வேண்டும். ஆனால், நவீன பௌதீகம் மேலும் மேலும் குழப்பமாகவும் மர்மாகவும்தான் உள்ளது. ஆன்மீக விடயங்களைவிட மேலும் மர்மமாகவுள்ளது எனலாம். நவீன பௌதீகம் என்று பேசுவதைப் பார்த்தால், ஆன்மீக விடயங்களே பரவாயில்லை என்றுபடுகிறது. ஐன்ஸ்டீனுடைய தத்துவங்களைக் கேட்கும் போது ஹேரிபாட்டரின் கதைகள் பரவாயில்லை என்றுபடுகிறது. ஏனெனில் அந்த தத்துவங்கள் மிகவும் மர்மமானதைப் பேசுகின்றன. நமது புரிதலும் அறிவும் அதிகரிக்க அதிகரிக்க வாழ்க்கை என்பது மேலும்மேலும் மர்மம் நிறைந்ததாகத்தான் ஆகிவிடுகிறது. எனவே நாம் நமது அறியாமையின் எல்லயை மேலும்மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறோம். இது ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுகிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டார் இயலில் பள்ளுப்பாட்டும் பள்ளுக்கவியும்

01

தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டார் இயலிலே, “நாட்டார் பாடல்” என்ற அம்சத்துள் பள்ளுப்பாட்டு, பள்ளுக்கவி என இரண்டு பிரிவுகள் உண்டு எனலாம்.

பாட்டிற்கும், கவிக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் பாட்டுப் பல அடிகளைக் கொண்டதாக இருக்கும். கவி, நான்கு அடிகளை மட்டும் கொண்டதாக இருக்கும். இதே வேளை கவி ஒருவரால் மட்டும் பாடப்படுவது, பள்ளுப்பாட்டு போட்டி நிகழ்ச்சியாக பலர் சேர்ந்த பாடுவது. தென் கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியலில் “நாட்டார் பாடல்” என்ற அச்சம் பற்றிப் பலநூறு கட்டுரைகளும், எட்டிற்கு மேற்பட்ட தொகுப்பு நூல்களும் வெளி வந்துள்ளன. எந்தக் கட்டுரையிலாயினும் அல்லது எந்தத் தொகுப்பு நூலிலாயினும் பள்ளுப் பாட்டுச் சம்பந்தமாகவோ அல்லது பள்ளுக்கவி சம்பந்தமாகவோ எதுவித சிறுகுறிப்பேனும் இதுவரை வெளிவரவில்லை என்பது மனவருத்தமான ஒரு விடயமாகும்.

- இந்த மனவருத்தத்தினையும் இந்த மனவருத்தத்தினால், ஏற்படும் ஆதங்கத்தினையும் இம்மாநாட்டில் வாசிக்கவென எழுதப்பட்ட, இவ்வாய்வுக் கட்டுரையின் ஊடாகத் தெரிவித்து இது பற்றிய ஆய்வு தொடர ஆசித்து, இந்தப் பள்ளுக் கவி, பள்ளுப்பாட்டுச் சம்பந்தமான தகவல்களையும் ஆய்வுக்குறிப்புகளையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்று தொட்டு இன்று வரை கிராமிய மக்களின் வாழ்வியலோடு இணைந்துவிட்ட பள்ளு, அம்மானை, குறவஞ்சி, ஊஞ்சல், கும்மி என்பன நாட்டாரியல் வடிவங்களாகும்.

“பள்ளு” தமிழ் இலக்கியத்தில் 96 பிரபந்தங்களில் ஒன்றாகும். பள்ளு இலக்கியத்தில், “கூடற்பள்ளு” எனும் நூலே முதன் நூலென்றும் கூடற்பள்ளுக்கு முதலே திருவரூர்ப்பள்ளு எழுந்தது என்றும் இருவகைக் கருத்துக்கள் கூறப்படுகின்றன. இவை இரண்டிற்கும் முந்தியது ஞானப்பள்ளு என்றொரு கருத்தும் உண்டு. (ஆதாரம்-காமராஜர் பல்கலைக்கழக எம்.ஏ.வகுப்புத் தமிழ் பாடநூல்)

இது இவ்வாறிருக்க பள்ளுப் பிரபந்தத்தின் மூல வடிவத்தைப் பண்டிப் பள்ளு, குருவிப்பள்ளு என்பவற்றில் காணமுடிகிறது என்பர் ஒரு சிலர்.

வாய்மொழி இலக்கியமாகத் திகழ்ந்த “பள்ளு” காலப்போக்கில் கற்றறிந்த புலவர்களால், வளர்ச்சியடைந்து, 96 பிரபந்தங்களில் ஒன்றாகச் சேர்ந்து கொண்டது எனலாம். இக்கருத்து “தமிழ்இலக்கியத்தில் பள்ளு” என்ற அடிப்படையில் கூறக்கூடிய ஒரு கருத்தாகும்.

ஆனால், இலங்கையின் தென் கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியலில் பள்ளுப்பாட்டு வளர்ச்சி பெறாது, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாடியவர்களோடு மட்டும் நின்று விட்டது எனலாம். இதற்குப் பல காரணங்கள் இருந்த போதும் முன்பாக உள்ள ஒரு சில காரணங்களை மட்டும் இக்கட்டுரையின் மூலம் எடுத்துக்காட்டுவது. பொருத்தமானதாகும்.

1. இப்பள்ளுப்பாட்டு பாடப்பட்ட அமைப்பு வித்தியாசமானது. போட்டி நிகழ்ச்சி போன்றது.

2.இப்போட்டியில் பங்கு கொண்டவர்கள் உடனுக்குடன் கவி படிக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்தால், பாடிமுடிந்ததும் என்ன பாடினோம் என்பது நினைவுக்கு கொண்டுவர முடியாத கஷ்டமான விடயமாக இருந்துள்ளது.

3. இவர்கள்பாடிய பள்ளுப்பாட்டில் இடம் பெற்ற சொற்கள் அசிங்கமானது. அதனால் இதனை எழுத்து வடிவத்தில் கொண்டுவந்து பதிதல் என்பது கூச்சப்படக் கூடிய ஒரு விடயமாகக் கருதப்பட்டது.

4. அக்கால முஸ்லிம் சமூகம் இப்படிப்பட்ட இலக்கியங்களில் அக்கறை கொள்ளாது, மத விடயங்களில் மட்டும் அக்கறையோடிருந்தது. போன்ற நான்கு காரணங்கள் முனைப்பாக உள்ளன.

இனி ஒவ்வொரு விடயமாக எடுத்து நோக்கினால், முதலாவது விடயமான இப்பள்ளுப்பாட்டு பாடப்பட்ட அமைப்பு ஒரு போட்டிநிகழ்ச்சியாவே நடைபெற்றுள்ளது. அதுவும் ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சியாகவே இது கருதப்பட்டது.

**“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை”**

இப்போட்டியில் பங்கு கொண்டவர்கள் முற்று முழுக்கப் படியாதவர்களும் அல்ல. படித்தவர்களும்அல்ல. 1ஆம் 2ஆம் வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொண்டவர்கள் எனவும் அறியமுடிகிறது. அதனால், இதனை நாட்டார் இயலில் செமி ஓறல் இனத் துள்ளேயே சேர்க்கக் கூடியதாக உள்ளது.

நல்ல குரல் வளமும் உடனுக்குடன் கவிபாடக்கூடிய அல்லது பள்ளுப் பாடக்கூடிய தன்மையும் கொண்ட ஒருவர் தனக்கு பக்கபலமாக நல்ல குரல்வளம் உடைய ஐந்துபேரை தன்னுடன் சேர்த்துக்கொள்வார்.

இந்தக் கோஷ்டியினர், பக்கவாத்தியங்களான சல்லரி, டப்பளா, கெஞ்சூரா போன்றவற்றையும் கையாளக் கூடியவர்களாகவும் இருப்பர். இதேபோல எதிரணியிலும் தலைவரோடு சேர்த்து அறுவர் இருப்பர். இந்த இரண்டு கோஷ்டியினரும் வேறுவேறு ஊர்களைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பர். இரு குழுக்களும் சந்திக்கும் இடம், ஊருக்கு ஒதுக்குப் புறமான சனசஞ்சாரமற்ற இடமாக இருக்கும். அங்கு மேடை அமைக்கப் பட்டும் அலங்கரிக்கப்பட்டும் இருக்கும்.

(தொடரும்)

மணிப்புலவர் மருதூர் மஜீத்
B.A (Hons.) Dip in-Edu, S.L.E.A.S
ஓய்வு பெற்ற கல்வி, கலை, கலாசாரப் பணிப்பாளர்

# அனைத்து மாணவர்களும் இணைந்து கல்வி கற்கும்

# பல்கலைக்கழக வலையமைப்பை கட்டியெழுப்புவோம்

## இனப்பாகுபாடு இல்லை என்கிறார் எஸ்.பி

(கொழும்பு)

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் என இனரீதியாக பிரிக்கப்படமாட்டாது. அனைத்து மாணவர்களும் இணைந்து கல்வி கற்கும் பல்கலைக்கழக வலையமைப்பை கட்டியெழுப்புவோம்.

இலங்கையில் வாழும் அனைவரும் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியோர். எனவே நாமனைவரும் ஒரே மனித குலத்தை சேர்ந்தவர்கள் என்பதை மறந்து விடலாகாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் இணைந்த புதிய மாணவர்களை வரவேற்கும் வைபவம் கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் வாழும் அனைத்துலக இன மக்களும் இந்தியாவில் இருந்து வந்தவர்களே. அன்று இந்திய கலாசாரத்திற்கமைய ஆசியாவிலேயே மனித குலம் தோன்றியது.

யத்ஷ, நாக, வனவாரி கோத்திரங்களில் ஒரு பிரச்சினை தான் சிங்கள, தமிழ் மக்களாக பிரித்தன. அதன்பின்னர் சிங்கள பௌத்தர்களாகவும் தமிழ் பௌத்தர்களாகவும் வாழ்ந்தனர். பின்னர் தமிழ் மக்கள் இந்துக்களானார்கள். சிங்கள அரசியல் தலைவர்களும் இந்தியாவில் இருந்து இங்கு வந்த பின்னரே சிங்கள பௌத்தர்கள் ஆனார்கள். இதற்குச் சிறந்த உதாரணம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஆகும்.

பண்டாரநாயக்கவின் தாத்தாவின் பெயர் நீல பெருமாள் ஆகும். இதனை மாற்றியே அவர் பண்டாரநாயக்க என்ற பெயரை சூட்டிக் கொண்டார்.

ஜே.ஆரின் கூற்றுப்படி அவரது தாத்தாவும் தென்னிந்தியாவில் இருந்து இலங்கை வந்து ஜெயவர்த்தன பரம்பரையில் திருமணம் செய்து கொண்டதால் ஜெயவர்த்தன என்ற பெயர் வந்தது. இவை அனைத்தையும் ஆராயும் போது சிங்களவர், தமிழர் அனைவரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்பது புலனாய்கின்றது.

எனவே இவை தொடர்பில் சிந்தித்து தீர்மானங்களை எடுக்கும் புத்திக்கூர்மை எமது மாணவர்களுக்கு உண்டு. கடந்த காலங்களில் வடக்கு- கிழக்கில் புலிகளே பல்கலைக்கழகங்களை நிர்வகித்தனர்.

தெற்கில் ஜே.வி.பி.யினரே பல்கலைக் கழகங்களை நிர்வகித்தனர். ஆனால் இந்த நிலை மாறியுள்ளது. மாணவர்களுக்கு கல்வி கற்கக்கூடிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. சிங்கள, தமிழ் மாணவர்களிடையே விரிசல்கள் ஏற்படுவதை தடுப்பதற்காக பல்கலைக்கழக கற்றை மொழி ஆங்கில



மாக மாற்றப்படவுள்ளது.

பல்கலைக்கழகம் என்பது இனவாதம், மதவாதம், கோத்திரவாதம் இல்லாத புத்திக் கூர்மையுடையோர் இருக்கும் இடமாகும். கிழக்குப் பல்கலைக்கழகம் சிங்கள மயமாக்கப்படுவதாகவும் கடந்த காலங்களில் பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழக சட்டங்கள், இஸட் ஸ்கோர், பிரதேச இன விகிதம் தொடர்பான வரையறைகளைபின்பற்றியே மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் என்றார். (அ-2)

## கஞ்சாச் செடி வளர்த்த நபர் கைது

(கொழும்பு)

வீட்டுத் தோட்டத்தில் இரகசியமாக கஞ்சாச்செடி வளர்த்ததாக தெரிவிக்கப்படும் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கண்டி கொஹாகொட பகுதியிலுள்ள வீட்டுத்தோட்டமொனறில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன்போது கஞ்சாச்செடிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் அவரிடமிருந்து 80 கிலோகிராம் கஞ்சா செடிகளையும் கைப்பற்றியுள்ளனர். (அ-2)

## கண்டியில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கண்டி தெப்பக்குளத்தில் மிதந்து கொண்டிருந்த ஆணின் சடலம் ஒன்றை கண்டிப் பொலிசார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

கண்டி மல்வத்த விகாரைக்கு அண்மையாகவுள்ள கண்டி தெப்பக்குளத்திலேயே இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது.

தெப்பக்குளக் கரையோரமாக காலை வேளையில் பயணித்த பாதசாரிகள் தெப்பக்குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்து பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இத் தகவலையடுத்தே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-2)

## மாவீரர்தின அச்ச நிலைமையை ஜனாதிபதி மஹிந்த போக்கியுள்ளார்

### டளஸ் அழகப்பெரும புகழாரம்

(கொழும்பு)

நாட்டு மக்கள் அனைவரும் இதய சுத்தியுடன் யோசிக்க வேண்டிய விடயம் இருப்பதாக அமைச்சர் டளஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

காலி- பலபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒரு காலகட்டத்தில் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மிகவும் அச்சுறுத்தலாக காணப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தை மாவீரர் தினமாகக் கொண்டு கொழும்பிலும் நாட்டிலும் பல்வேறு வன்முறைகள் இடம் பெற்றதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தினத்தை கருத்தில் கொண்டே நாட்டு மக்கள் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தற்போது அனைவரும் இதய சுத்தியுடன் சிந்திக்க வேண்டிய விடயம் ஒன்று இருப்பதாகவும் ஜனாபதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறான ஒரு கால கட்டத்தை மாற்றி தற்போது சுதந்திரமான சூழ்நிலையை உருவாக்கி இருப்பதாகவும் அமைச்சர் தெரித்துள்ளார். (அ-2)

## ஊடகங்களை கட்டுப்படுத்துவது ஆபத்தாக அமையக்கூடும்

### விஜேதாச எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகங்களை கட்டுப்படுத்துவது ஆபத்தாக அமையக்கூடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வைத்தியத்துறை, பொறியியல்துறை போன்றே ஊடகங்களுக்கும் ஒழுக்க விதிகள் காணப்படுகின்றன. மக்களின் நலனை முதனிலையாகக் கொண்டு தொழில்சார் ஒழுக்க விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.


ஊடகத்துறைச் சேர்ந்தவர்களை குற்றவாளிகளைப் போன்று கருதி ஒழுக்க விதிகளை உருவாக்குவது ஆபத்தாக அமையக் கூடும்.

நாடுகளில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் சுய ஒழுக்க விதிகளை பின்பற்றி இயக்குவதற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் பாரிய பின்விளைவுகள் ஏற்படக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

துனிசியா முதல் லிபியா வரையில் பாரியளவில் கிளர்ச்சி வெடித்த ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டமைக்கான பிரதான ஏதுவாக மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை முடக்கப்பட்டமையை குறிப்பிடலாம்.

தகவல் அறிந்து கொள்ளும் மக்களின் உரிமை முடக்கப்பட்டால் அவர்கள் வேறு வழிகளில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அதுபோன்று போலியான திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வெளியிடுவதனை ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை அளிக்கக் கூடிய வகையில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் ஊடகங்கள் செயற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



ஜனாதிபதியின் 66 ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் பணிமனையில் 200 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்
கள் வழங்கும் நிகழ்வு ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்
முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மாணவி ஒருவரு
க்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும் கலந்து கொண்டமாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# ரிஸானா தொடர்பான விவகாரம் சாதகமான பதில் கிடைக்கும்

## கிங்ஸ்லி ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கின் பெற்றோர் உட்பட இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினர் அவர் பணிபுரிந்த எஜமானரின் உறவினர்களை சந்தித்துள்ளனர்.

இதன்போது ரிஸானாவை விடுவிப்பதற்கான யோசனைகளையும் இலங்கைப் பிரதிநிதிகள் முன்வைத்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இஸ்லாமிய சமயத் தலைவர்களும் அடங்கியுள்ளதுடன் இவர்கள் ரிஸானா நபீக்கின் எஜமானரது குடும்ப உறவினர்களிடம் கடந்த தினங்களில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மிகவும் சாதகமான முறையில் அமைந்திருந்ததுடன் இதன்போது விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு எதிர்காலத்தில் சிறந்த பலன் கிடைக்கும் என நம்புவதாகவும் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டார். (அ-2)

# நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை நடுநிலையாக ஏற்றுக்கொள்கின்றேன்

## அனோமா தெரிவிப்பு



இலங்கையயில் அநீதிக்கு எதிராக மக்கள் அணி திரள வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனது கணவர் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே துணைவியாரான அனோமா பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது கணவர் சரத் பொன்சேகாவிற்கு அளிக்கப்பட்ட தீர்ப்பினை நான் முன்கூட்டியே எதிர்பார்த்தேன். எனினும் நீதிமன் றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை நடுநிலையுடன்ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், நாட்டின் ஜனநா யகத்தை கட்டியெழுப்ப அனைத்து மக்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

இந்த அநீதியான சம்பவம் தொடர்பில் எந்தவொரு தரப்பினர் மீது சாபம் விடும் அளவிற்கு நான் இழிந்த நிலையை அடையவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நீதிமன்றத் தீர்ப்பு அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே நியாயமான தீர்ப்பு வழங்கப்பட மாட்டாது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தீர்ப்பை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றேன். ஜனநாயக நாடொன்றில் இவ்வாறான தீர்ப்பை எதிர்பார்க்க முடியாது என்றும் சர்வாதிகாரம் நிலவும் நாடுகளிலேயே இவ்வாறான தீர்ப்புக்கள் அறிவிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என சிங்கள இணைய ஊடகமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தேசிய மயப்படுத்தும் சட்டத்திற்கு பிரித்தானிய நிறுவனம் எதிர்ப்பு

(கொழும்பு)

வினைத்திறனாக இயங்காத நிறுவனங்களை தேசிய மயப்படுத்தும் சட்டத்திற்கு பிரித்தானிய நிறுவனமொன்று எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

செவனகல சீனி உற்பத்தி நிறுவனத்தின் பங்குதாரராக இயங்கி வரும் நிறுவனமொன்றே இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக உலக வங்கியில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச முதலீட்டு முரண்பாடுகளை தீர்க்கும் நிறுவனத்தில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் கீழ் தேசிய மயப்படுத்தப்படவுள்ள 37 நிறுவனங்களில் செவனகல நிறுவனமும் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

நிறுவனம் சுவீகரிக்கப்படவுள்ளமைக்கு எதிராக சர்வதேசத்தின் உதவியை நாடவுள்ளதாக நிறுவனத்தின் உரிமையாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

எனினும் பிரித்தானிய முதலீட்டாளர் தனிப்பட்ட ரீதியில் குறித்த சட்டத்திற்கு எதிராக வோஷிங்டனில் அமைந்துள்ள முதலீட்டு முரண்பாடு குறித்து நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★ 284-டயோக்கிளேசியன். ரோமப் பேரரசின் மன்னன் ஆனான்.

★ 1194-இத்தாலியின் பலேர்மோ நகரம் ஆறாம் ஹென்றியால் கைப்பற்றப்பட்டது.

★ 1700-சுவீடனின் பன்னிரண்டாம் சார்ள்ஸ் நார்வா என்ற இடத்தில் ரஷ்யாவின் முதலாம் பீற்றரைத் தோற்கடித்தான்.

★ 1910-பிரான்சிஸ்கோ மடேரோ மெக்சிகோ ஜனாதிபதி போர்பீரியோ டயஸ் என்பவரைப் பதவியில் இருந்து அகற்றி விட்டதாகவும் தன்னை ஜனாதிபதியாகவும் அறிவித்தார். மெக்சிக்கோ புரட்சி ஆரம்பமாகிற்று.

★ 1917-உக்ரேய்ன் குடியரசாக அறிவிக்கப்பட்டது.

★ 1923-ஜேர்மனியின் நாணயம் பேப்பியர்மார்க் ரெண்டென்மார்க் ஆக மாற்றப்பட்டது. (1 ரெண்டென்மார்க்= 1 திரில்லியன் பேப்பியர்மார்க்)

★ 1936-ஸ்பானிய அரசியல் தலைவர் ஜோசே அண்டோனியோ பிறிமோ டெரிவேரா உயிரிழந்தார்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமேனியா, சில வாக்கியா ஆகியன அச்சு அணி நாடுகள் அமைப்பில் இணைந்தன.

★ 1947-இளவரசி எலிசபெத் இளவரசர் பிலிப்பை திருமணம் புரிந்தார்.

★ 1962-சோவியத் ஒன்றியம் தனது ஏவுகணைகளை கியூபாவில் இருந்து அகற்றுவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து ஐக்கிய அமெரிக்கா கரிபியன் நாட்டுக்கெதிராக கொண்டு வந்த பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது.

★ 1977-ஆறு ஆண்டுகள் சிறைக்குப் பின் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் றோகண விஜேவீர விடுதலை செய்யப்பட்டார்.

★ 1979-சவுதி அரேபியாவில் மெக்காவில் காபா மசூதியைத் தாக்கிய சுணி முஸ்லிம் தீவிரவாதிகள் 6 ஆயிரம் பேரைப் பணயக் கைதிகளாக்கினர். பிரெஞ்சுப் படைகளின் உதவியுடன் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

★ 1985-மைக்ரொசொப்ட்டின் விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டது.

★ 1988-ராஜீவ் காந்திக்கும் மிக்கைல் கோர்பசேவுக்கும் இடையே இரு அணு உலைகளைக் கூடங்குளத்தில் அமைப்பது என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் சோவியத் கலைப்பை அடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டது.

★ 1992-இங்கிலாந்தில் வின்சர் அரண்மனையில் தீ பரவியதில் பலத்த சேதம் ஏற்பட்டது.

★ 1993-மகெடோனியாவில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 116 பயணிகளில் 115 பேரும் 8 சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.

★ 1994-அங்கோலா அரசுக்கும் யுனீட்டா தீவிரவாதிகளுக்கும் இடையே சாம்பியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதில் 19 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. எனினும் அடுத்த ஆண்டு போர் மீண்டும் ஆரம்பமாகிற்று.

★ 1998-பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் முதலாவது பகுதி சாரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★ 1999-மன்னார் மடு தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 42 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1750-திப்பு சுல்தான், மைசூர் பேரரசன் (இ.1799)

★ 1901-நாசிம் ஹிக்மட், துருக்கிய கவிஞர் (இ.1963)

★ 1942-ஜோ பைடன், அமெரிக்க துணைத் தலைவர்

### இறப்பு

★ 1910-லியோ தல்ஸ்தோய், ரஷ்ய எழுத்தாளர் (பி.1828)

### சிறப்பு நாட்கள்

★ மெக்சிக்கோ- புரட்சி தினம் (1910)

★ வியட்நாம்-ஆசிரியர் தினம்



★ யுனிசெப்- அனைத்துலக குழந்தைகள் தினம்

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17-11-2011 முதல் 16-12-2011 வரை




(சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி, 1, 2, 3 பாதங்கள்)

**எடுத்த முடிவை மாற்றிக் கொள்ளாத துலாம் இராசி நேயர்களே!**

யாரையும் உடனடியாகா நம்ப மாட்டீர்கள் எதையும் ஆழ்ந்து சிந்தித்த பிறகுதான், நம்பிக்கை வைப்பீர்கள் அப்படி நம்பிக்கை வைத்து விட்டால் அதில் இருந்து மாறவே மாட்டீர்கள். எந்தச் செயலில் ஈடுபட்டாலும் இலட்சியத்தோடு செயற்படுவீர்கள். உங்களைப்பற்றி யாராவது தவறாகப் பேசினாற்கூட அதைப்பற்றிக் கவலைப்படாமல், அவர்களுக்கு அறிவுரை கூறி திருத்துவதில் வல்லவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்தக் கார்த்திகைமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது குடும்பஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் ஒன்று கூடி சஞ்சரிக்கிறார்கள் குறிப்பாக, அதில் இலாபாதி பதியும் விரையாதி பதியும இணைந்து இருப்பதனால், வரவும் செலவும் சமமாகும் என்றே சொல்ல வேண்டும். விரையாதிபதி, வக்ரம் பெற்று தன ஸ்தானத்தில் இருப்பதால், ஒரு சில சமயங்களில் கடன் வாங்கும் சூழ் நிலைகூட உருவாகலாம்.

வக்ர வியாழனின் பார்வை உங்கள் இராசியில் பதிவது ஓரளவு நன்மைதான். 3, 6 இற்கு அதிபதி வக்ரம் பெறுவதால், "கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் இராஜ யோகம்" என்பதற்கு இணங்க சில நல்ல பலன்களும் உங்களுக்கிடையிடையே தலை காட்டும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியானாலும்கூட மனநிம்மதி குறையலாம். அஷ்டமத்துக் கேது, அலைச்சலையும், வீடு மாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றங்களையும் எதிர்பார்த்தபடியே ஒரு சிலருக்கு வழங்கலாம். இருந்தாலும் கேதுவுக்கு உரிய தெய்வமாக விளங்கும் விநாயகரை, அவரது கவசங்களை பாடி கைகூப்பித் தொழுது வழிபட்டால், கனவுகள் நனவாகும். காரிய வெற்றியும் உருவாகும். திசை மாறிய விநாயகரை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டால், செல்வ நிலையில் குறைவு ஏற்படாது.

நவம்பர் 23 ஆம் திகதி இராசி நாதன் சுக்கிரன் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக உடன் பிறப்புக்கள் வழியாக ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலனுக்காக வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும்.

உங்கள் இராசிக்கு 9, 12 இற்கு அதிபதியான புதன் நவம்பர் 30ஆம் திகதி முதல் வக்ரம் பெறுகிறார். விரையாதிபதி சில நாட்கள் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். எனவே இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய காலமாகும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்களை விட்டுப்பிரிய நேரிடலாம். பாதுகாப்பாக வைக்க வேண்டிய பொருளில் பழுதுகள் ஏற்படலாம். விலை உயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை. பூர்வீக சொத்துக்களில் ஏற்படும் பஞ்சாயத்துக்களை ஒரு மனதாக ஏற்றுக்கொள்வது நல்லது.

உங்கள் இராசி நாதன் சுக்கிரனுக்கு, குரு பகைவன். எனவே அவரது வக்ர காலம் நற்பலனைக் கொடுக்கும். வக்ர நிவர்த்திக் காலம் யோசித்துச் செயற்பட வேண்டிய காலமாகும். வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொண்டால், இக்காலம் பொற்காலமாகும். டிசம்பர் 15 ஆம் திகதி, குரு வக்ர நிவர்த்தியாகிறார். என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இம்மாதம் குடும்பத்திலிருந்து குழப்பங்கள் அகலும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். வெளியூர் அல்லது வெளிநாடு செல்லப் போட்ட திட்டங்கள் நிறை வேறும். கணவன் மனைவிக்குள் ஒருசில சமயங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும். ஒரு சில சமயங்களில் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். இராகு வழிபாடு யோகம் சேர்க்கும்.

# சிவல்புரி சிங்காரம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

**பிடிவாத குணத்திற்குச் சொந்தக் காரர்களாக விளங்கி, பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

கடிவாளம் இல்லாத குதிரையைப் போல ஆரம்பத்தில் உங்கள் குணம் இருந்தாலும், கடவுள் வழிபாட்டைக் கற்றுக் கொண்ட பிறகு, பக்குவமாக மாறிவிடுவீர்கள். மனம் திறந்து பேசுவதால், மற்றவர்களின் எதிர்பார்ப்புக்களை ஒரு சில சமயங்களில் சந்திக்க நேரிடலாம். ஆனால், அதற்காகக் கவலைப்படமாட்டீர்கள் பொறுப்பைக் கடவுளிடம் விட்டுவிட்டு பொழுதெல்லாம் பணிபுரியத் தொடங்கி விடுவீர்கள். அறிவுரை சொல்வதில் வல்லவர்களாக விளங்குவதால், அனைவரும் உங்கள் இல்லம் தேடிவந்துகொண்டே இருப்பர்.

உங்களுக்கு இந்தக் கார்த்திகை மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது உங்கள் இராசியிலேயே சூரியனும், தொழில் ஸ்தானத்தின் இராசிநாதன் செவ்வாயும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள். இந்த யோகம் ஒரு சிறப்பான யோகமாகும். அதுமட்டுமல்லாமல், புதன், சுக்கிரன், சூரிய சேர்க்கையோடு இராகுவும் இணைந்து கூட்டுக்கிரக யோகமும் உருவாகிறது.

எனவே இம்மாதம் தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் மாதமாக அமையப் போகிறது. தொழில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். வெற்றிக்கு உரிய விதத்தில் காரியங்கள் அனைத்தும் அமைவது கண்டு ஆச்சரியப் படுவீர்கள். முக்கிய பிரமுகர்கள் வீடு தேடி வருவார்கள். கற்ற கல்விக்கு ஏற்ற வருமானம், கடை திறப்பு விழாக்கள், கல்யாணம், பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் போன்றவற்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கலகலப்பான சூழ்நிலையும் அமையும். சனிப் பெயர்ச்சிக்குப்பிறகு உங்களுக்கு ஏழரைச் சனி வந்தாலும் அது வாழ்வில் வளத்தையே கொடுக்கும். எந்நாளும் இனிமை சேரும். குறிப்பாக முருகப் பெருமான் வழிபாடு, முன்னேற்றத்திற்கு வித்திடும்.

நவம்பர் 23 ஆம் திகதி விரயாதிபதி சுக்கிரன் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால், விரயத்திற்கு ஏற்ப தனலாபம் வந்து கொண்டே இருக்கும். எனவே விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

நவம்பர் 30 ஆம் திகதி முதல் புதன் வக்ரம் பெறுகிறார். டிசம்பர் 5 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் இந்த நேரத்தில் வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும்.




இழப்புக்களை ஈடு செய்ய எடுத்த முயற்சி வெற்று பெறும். புதிய கூட்டாளிகள் வந்திணைவார்கள். பொருளாதாரப் பற்றாக்குறையை சீர்செய்ய புதிய யுக்திகளைப் பயன் படுத்துவீர்கள்.

குரு இம்மாதக் கடைசியில் வக்ர நிவர்த்தியாகிறார். எனவே அதன் பார்வை பலம் கூடுகிறது. 2,10,12 ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிவதால், பணப் புழக்கம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் பொதுவாழ்வில் ஈடுபட்டு இருப்பவர் களுக்கு பொறுப் புக்களும் பதவிகளும் தானாகவே வந்து சேரும்.

இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவர விநாயகர் வழிபாட்டை மேற் கொள்ளுங்கள். அத்தோடு, திருமால் இலட்சுமியை முறையாக வழிபட்டால், வருமானம் பெருகும் வளர்ச்சி கூடும். பௌர்ணமியன்று கிரிவலம் வருவது வாழ்க்கைப் பாதையைச் சீராக்கும்.

இம்மாதம் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதமாக அமையும். விலகிச் சென்றவர்கள் விரும்பிவந்து சேருவர். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர். ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர்களுக்காக வாங்கிக் கொடுத்த தொகை வந்துசேரும். கணவன் மனைவிக்குள் கனிவு கூடும். வீடுகட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் வெற்றிகிட்டும். சர்ப்ப சாந்தியை முறையாகச் செய்தால், சந்தோசங்கள் வந்து சேரும்.

(வளரும்)

# வாங்கி விற்றது போதும்; எமது முயற்சி உற்பத்தித் துறையாக இருக்கட்டும்

## எமது தேட்டமும் பல்துறைகளில் முதலிடப்பட வேண்டும்

## மத்திய வங்கி வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் கோரிக்கை

தற்போது எமது வர்த்தக முயற்சிகள் என்று வாங்கி விற்கும் நடவடிக்கைகளிலேயே பெரும்பாலும் அமைந்துள்ளது. இது உற்பத்தியில் ஈடுபடும் நிலைமையாக அதிகளவில் அதிகரிக்க வேண்டும்.

அத்தோடு எமது முதலீடுகளையும் பன்முகப்படுத்த வேண்டும். அதாவது மரபுவழியாக நாம் பழக்கப்படுத்திக் கொண்ட முதலீட்டு முறைகளை,

காணி நிலம் மற்றும் நகைகளில் முதலிடுவது, பங்குச்சந்தைகளில் முதலிடுதல், அரச பிணையங்களான திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகளில் முதலிடுதல் எனப் பங்கிட்டுக் கொண்டால், எமது முதலீடு ஆரோக்கியமானதாக அமையும் என இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண சிரேஷ்ட முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்தார்.

நற்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிட்டட், இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடத்திய முதலீட்டாளர் விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது முதலீடுகள் பல்துறைகளில் முதலிடப்பட வேண்டும். அவ்வாறு நோக்கும்போது அரச பிணையங்களில் அதாவது திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகளில் முதலிடலாம். இது மத்திய வங்கியால் பாதுகாக்கப்பட்டது.

திறைசேரி உண்டியல்கள் 91 நாட்கள், 82 நாட்கள் மற்றும் 364 நாட்கள் முதிர்ச்சி கொண்டவை. அதாவது 9 ஆயிரம் ரூபாயைச் செலுத்தி 10 ஆயிரம் ரூபாய் முகப் பெறுமதியுடைய (364 நாட்கள்) திறைசேரி உண்டியல்களை செய்தால், 364 நாட்கள் முடிய நீங்கள் 10 ஆயிரம் ரூபாயைப் பெறலாம். இதேபோல் திறைசேரி முறிகளிலும் முதலிடலாம். அவை 2-20 ஆண்டுகள் வரையில் முதிர்ச்சி கொண்டவை.

அரசபிணையங்களைக்கையாள 11 முதனிலை வணிகர்களும், 23 உரிமம்பெற்ற வங்கிகளும் உள்ளன.

அரசபிணையங்களில் முதலிட்டு நீங்கள் பெற்றுக் கொள்ளும் வருமானத்திற்கு வரி விலக்கு (தனிநபர்களுக்கு) அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிணையங்களை பிணையாக வைத்து கடன் பெற்றுக்கொள்ளவும் (90% வரை) முடியும்.

அரச பிணையங்களில் முதலிடுவது எவ்வர்று என நோக்கினால், நீங்கள் முதனிலை வணிகரை அனுகி, மத்திய வைப்பக கணக்கு திறந்து, கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடமுடியும்.

அத்துடன் அரச பிணையங்களில் மாகாண அடிப்படையில் மேல் மாகாணத்தில் 54 ஆயிரம் பேரும், வட மாகாணத்தில் 352 பேரும், ஆகக்குறைந்த அளவாக கிழக்கு மாகாணத்தில் 175 பேரும் முதலிட்டிருக்கிறார்கள்.

இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

அதேவேளை வேறோர் விடயத்தையும் குறிப்பிட வேண்டும். அதாவது வட மாகாணத்தில் 2009 இறுதியில் 75 வங்கி கிளைகள் இருந்தன. இது இப்போது வங்கிக் கிளைகளும், விரிவாக்கற் கிளைகளுமாக 150 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் மத்திய வங்கி இப் பிரதேசத்தில் ரூ.4.4 பில்லியனை அபிவிருத்திக் கடனாக வழங்கியுள்ளது.

அதைவிட வங்கிகளாலும் தனிப்பட்ட முறையில் அதிகளவு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் எமது நிதி தொழிற்துறையில், உற்பத்தித் துறையில் முதலிடப்பட வேண்டும். அதற்கு நிறுவனங்களை இங்கு அதிகளவில் தொடங்க வேண்டும். 80 களின் ஆரம்பத்தில் இங்கு ஆயிரக்கணக்கான உற்பத்தி முயற்சிகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் மீண்டும் உற்பத்தித் துறையில் கவனம் செலுத்த வேண்டும். உழைக்கும் பணமும் பல்துறைகளில் முதலிடப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்த யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்,

முதலீட்டின் மூலம் முதலீட்டாளர் தமக்கும், நாட்டுக்கும் பங்களிக்கிறார்கள். சரியான முதலீட்டுத் துறையை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முதலீட்டாளர்களுக்கு உண்டு.

பணம்- இலக்ஷ்மி. அதை சரியாகக் கையாள வேண்டும்.

யாழ்.மக்கள் வங்கிகளில் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் விசுவாசமானவர்கள் என வங்கிகள் தெரிவிக்கின்றன.

எமது மக்கள் கடின உழைப்பால் பெறும் பணம் பாதுகாப்பான முறையில் முதலிடப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.49 | 111.13 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 172.00 | 175.98 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 146.64 | 150.66 |
| சுவிஸ் பிராங் | 118.01 | 121.84 |
| கனேடிய டொலர் | 105.70 | 108.87 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.62 | 112.23 |
| சிங்கப்பூர் டொலர் | 83.98 | 86.39 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




## முதலீட்டாளர் தினம் 2011 யாழில் டிசம்பர் 3-ம் திகதி

இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு 24-வது வருட பூர்த்தியை முன்னிட்டு நாடு பூராகவும் முதலீட்டாளர் தின நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அந்த வகையில், யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பல்வேறுபட்ட முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வெகுவிமர்சையாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அனுபவம் வாய்ந்த முதலீட்டு ஆலோசகர்களின் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் பிரத்தியேக தொடர்புகளையும் பெற்றுக் கொள்ள முடிவதுடன், முதலீட்டு துறைகளுடன் தொடர்புடைய இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, பங்குத் தரகர் நிறுவனங்கள், நம்பிக்கை அலகு நிதி முகாமைத்துவக் கம்பனிகள், வங்கிகள் மற்றும் நிதி முகாமைத்துவக் கம்பனிகள் போன்றவற்றிலிருந்து முதலீடுகள் தொடர்பாக பல பயன்தரு விடயங்களை பொது மக்கள் அறிந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கொழும்பில் கடந்த மாதம் முதலீட்டாளர் தினம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6332.47 | 6140.52 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5651.87 | 5349.54 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 4,543.74 | |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** விம்புத் லங்கா(46.40), எஸ்.எம்.பி.லீசிங் (w)(1.00), பேருவளை வோக்இன்(174.50), பிரிண்ட்கெயார் பிஎல்சி(38.00), சொட்லொஜிக்(19.00)

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எஸ்.எம்.பி.லீசிங் (w) (0.20), மிர்மர்(220.00), கலமசு (2300.00), என்வெயர்மெண்ட் றிசோசஸ்(w) 17.10), பிப்பிள் பினான்ஸ்(w)14.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# உலகின் மிகப் பணக்கார கிராமம்

கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களை நாடி வருவது உலகம் முழுக்க பொதுவான விதி. ஆனால் ஒரு கிராமம் கூட்டு முயற்சியெடுத்தால் நகரங்களில் இருப்பவர்கள்கூட வேலை தேடி அங்கு ஓடி வருவார்கள் என்பதற்கு உதாரணமாக இருக்கிறது ஒரு சீனக் கிராமம். 2 ஆயிரம் பேர் கூட வசிக்காத ஒரு குக்கிராமத்துக்கு வந்து தங்கி 20 ஆயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள் என்றால், அந்த கிராமத்தின் சாதனையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

சீனாவின் ஜியாங்ஸு மாகாணத்தில் இருக்கிறது ஹுவாக்ஸி கிராமம். கடந்த 1961-ம் ஆண்டு ஆரம்பித்து, ஐம்பது ஆண்டுகளில் இந்த கிராமத்தில் நிகழ்ந்த மாற்றங்கள், 'வானத்துக்குக் கீழே இருக்கும் கிராமங்களில் நம்பர் ஒன் கிராமம்' என்ற பெருமையைப் பெற்றுத்தருகிறது. இந்த கிராமத்தின் மாற்றங்களுக்கு சில நாட்களுக்கு முன்பு பொன்விழா கொண்டாடப்பட்டது. அப்போது 328 மீட்டர் உயரமுள்ள பிரமாண்ட ஹோட்டல் இங்கு திறக்கப்பட்டது. உலகின் முதல் 15 உயரக் கட்டிடங்களில் இதுவும் ஒன்று. ஒரு கிராமத்தில் இப்படி ஒரு வானுயர்ந்த கட்டிடம் வருவதற்குக் காரணம், வூ ரென்போ என்ற மனிதர்.

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள்தான் கிராமங்களையும் நகரங்களையும் நிர்வகிக்கிறார்கள். அப்படி இந்த கிராமத்தின் நிர்வாகி தான் வூ ரென்போ. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை மாட்டு வண்டிகளும் குடிசைகளுமாக உள்ளூர் வரைபடத்திற்கூட இடம்பிடிக்க தகுதியில்லாத கிராமமாக இருந்தது ஹுவாக்ஸி. வூ ரென்போ இதைமாற்றி அமைத்தார்.

வெறும் விவசாயம் மட்டுமே போதாது என்பதை உணர்ந்த அவர், கிராம சபை சார்பில் தொழிற்சாலைகளை உருவாக்கினார். கிராமமே அவர் பின்னால் இருந்தது. விவசாயத்தோடு தொடர்புடைய தொழில்கள், பிறகு இரும்புத் தொழிற்சாலை, அதன் தொடர்ச்சியாக ஆடைத் தொழிற்சாலையென வளர்ச்சிகள் வந்தன. எல்லாவற்றுக்கும் கிராம மக்கள் எல்லோருமே முதலாளிகள், தொழிலாளிகளும் அவர்கள்தான். வளர்ச்சி தேவையென்றால் விடுமுறையெடுக்காமல் உழைக்க வேண்டும் என கிராமமே முடிபெடுத்தது.

இன்றுவரை இங்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்ற பேச்சுக்கே இடம்இல்லை. வாரத்தில் 7 நாட்களும் வேலை நாட்கள் தான்!

ஒவ்வொரு வருட முடிபிலும் எவ்வளவு இலாபம் வந்திருக்கிறது என்று கணக்குப் பார்க்கிறார்கள். அதில் ஐந்தில் ஒரு பங்கை கிராம மக்கள் பிரித்து எடுத்துக்கொள்கிறார்கள். மீதி நான்கு பங்கு திரும்பவும் தொழில்களில் முதலீடாகி விடுகிறது.

இப்படியாக 50 வருடங்களில் இந்த கிராம மக்களின் முதலீடு 3 ஆயிரம் கோடி ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது. சீன பங்குச் சந்தையில் பட்டியல் இடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகியிருக்கிறது இந்தக் கிராம மக்களின் கூட்டு நிறுவனம். ஒரு காலத்தில் சைக்கிள் கூட சொந்தமாக வைத்திராத இந்த கிராம மக்கள், சமீபத்தில் கப்பல் போக்குவரத்து நிறுவனம் தொடங்கியிருக்கிறார்கள். சீக்கிரமே விமான நிறுவனம் தொடங்கும் உத்தேசமும் இருக்கிறதாம்.

ஹுவாக்ஸி கிராமத்தில் இப்போது 2 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிராம சபையே சகல வசதிகளோடு வீடு கட்டி கொடுத்திருக்கிறது. 18 வயதை தாண்டிய எல்லோருக்கும் கார்கள் உண்டு. மருத்துவம், கல்வியில் ஆரம்பித்து, வீட்டுக்கு சமையல் எண்ணெய் வரை எல்லாவற்றையும் கிராம சபை தந்து விடும்.

உலகின் மிகத்தரமான பாடசாலையும்



மருத்துவமனையும் இந்தச் சின்ன கிராமத்தில் இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்த பட்சம் ஒரு கோடி 50 இலட்சம் ரூபாயாவது சேமிப்பு கைவசம் இருக்கும். ஏழை என்ற அடையாளத்தோடு யாரையும் இந்தக் கிராமத்தில் பார்க்க முடியாது.

இப்போது இந்தக் கிராமத்தை நோக்கி தொலைதூர நகரங்களில் இருந்தும் பலர் வேலைதேடி வருகிறார்கள்.

இப்படி சுமார் 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புத் தந்திருக்கிறது கிராமம்.

இந்தக் கிராமத்தின் வெற்றிக் கதையை நேரில் பார்க்க, உலகெங்கிலும் இருந்து வருடத்திற்கு 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து குவிகிறார்கள்.

'நவீன சோஷலிஸ கிராமம்' என்ற பெருமையோடு அண்ணார்ந்து பார்க்க வைத்த இந்த வெற்றிக் கதைக்குப் பின்னால் உழைப்பும் கூட்டு முயற்சியும் மட்டுமே இருக்கிறது. இலங்கையிலும் ஏராளம் கிராமங்கள் இருக்கின்றன. யாராவது முயற்சி செய்து பார்க்கலாமே!

# தமிழக மக்களின் தலையில் 4 ஆயிரம் கோடி ரூபா சுமத்தப்பட்டுள்ளது

## ஜெ.ஆட்சிக்கு வந்தது தமிழ் நாட்டுமக்களின் ஏமாளித்தனம் என்கிறார் கருணாநிதி



தமிழ்நாட்டு மக்களின் ஏமாளித்தனத்தின் காரணமாக எப்படியோ ஆட்சிக்கு வந்துவிட்ட ஜெயலலிதா வந்ததும் வராததுமாக வரவு-செலவு திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே தமிழக மக்கள் தலையில் சுமார் 400 கோடி ரூபாய் அளவிற்கு வரியை சுமத்திவிட்டு அத்துடன் இல்லாமல் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் செய்யப்பட்ட நல்ல காரியங்களெல்லாம் தொடர்ந்து கொடுத்து வரும் முயற்சியை மேலும் தொடர்ந்து ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து மனிதனைக் கடிக்கின்ற செயலாக இப்போது எல்லா மட்டத்திலும் வரி உயர்வு, கட்டண உயர்வு என்று பல உயர்வுகளை அறிவித்திருக்கிறார் என தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 'மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு.

உயரப் போகிறோம் என்றுதானே அவருக்கும் அவர் அணியின் வேட்பாளர்களுக்கும் அபரிதமான வாக்குகளை அளித்து அரியாசனத்தில் அமர்த்தியிருக்கிறார்கள். நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த தெரியாமல் ஜெயலலிதா படும் பாட்டையும் அவர் மக்களை படுத்தி வைக்கும்பாட்டையும் ஏழை, நடுத்தர மக்கள் இதயம் வெடித்து சாகிற அளவுக்கு வரி உயர்வு, கட்டண உயர்வு விலை உயர்வு என்று இப்படி உயர்வு உயர்வு எனக் கூறி தமிழக ஏழை பாழைகளை குழியில் தள்ளி வேடிக்கைப் பார்க்கும் விளையாட்டை அல்லவா இப்போது அவர் நடத்திவருகிறார்.

மக்களை பழிவாங்கும் காரியத்தை நடத்திக்கொண்டே அந்தப் பழியைக் கடந்த கால அரசின் மீதும் மத்திய ஆட்சியின் மீதும் போடுவதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் செய்திருக்றார்.

மக்கள் தலையில் இந்தச் சுமைகளையெல்லாம் ஏற்றி வைத்துள்ள ஜெயலலிதா தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்ற வரையில் இதற்கெல்லாம் காரணம் கடந்த சில தி.மு.க ஆட்சிதான். அந்த ஆட்சியில் கடன் பளு அதிகமாகிவிட்டது. அவற்றைக்குறைக்கத்தான் என்று பழியை நம்மீது போட்டிருக்கிறார்.

ஆட்சி என்பது மக்களுக்கு நன்மை செய்வதற்காக இருப்பதே தவிர அவர்களைப் கொடுமைப்படுத்தி கட்டணங்களை உயர்த்தி அதிலே இன்பம் காண்பதற்காக அல்ல.

யார் பாதிக்கப்பட்டால் எனக்கென்ன மக்கள்தானே இந்த உயர்வுகளையெல்லாம் சந்திக்கப்போகிறார்கள் ஏற்றுங்கள் கட்டணங்களை. அதிலும் ஒரே நேரத்தில் மின் கட்டணம், பேருந்து கட்டணம், பால் கட்டணம் என்று அறிவிக்கலாம் என்று சொல்கின்ற மனப்பான்மை எனக்கில்லை. ஏனென்றால் என் இதயத்தில் இரக்கம் இருக்கிறது.

ஒரு அரசு சிந்திக்க வேண்டாமா? ஒரே நேரத்தில் இந்த மூன்று கட்டணங்களையும் உயர்த்தினால் சாதாரண ஏழை, நடுத்தர மக்கள், மாதச் சம்பளத்தில் திட்டமிட்டு குடும்பம் நடத்துவோர், ஒவ்வொரு மாதமும் தங்கள் செலவு 500 ரூபாய் அதிகமானால் எப்படி அவர்களால் சமாளிக்க முடியும் என்றெல்லாம் நினைத்துப்பார்க்க வேண்டாமா? ஏனைய மூத்த அமைச்சர்களாவது இதுபற்றி முதல் வருக்கு யோசனை கூற வேண்டாமா? அமைச் சரவைக்கூட்டம் அதற்காகத்தானே நடந்தது. கொலு பொம்மைகளை போல வீற்றிருந்து பாராட்டுக்களை, புகழுரைகளை வழங்குவதிலேயே கவனத்தைச் செலுத்துவது மட்டும் நல்லதா?

ஒட்சிசன் குழாயைக் கழற்றி விட்டிருக்கிறார்.

ஜெயலலிதா தனது அறிக்கையில் இறுதியாக வெள்ளம் வரும் முன்பே அணை போட வேண்டும். மரணப் படுக்கையில் உள்ள இந்தப் பொதுத்துறை நிறுவனங்களுக்கு தற்போது ஒட்சிசன் வழங்கவில்லை என்றால் அவை செயலற்றுவிடும் என்பதற்காகத் தான் இந்த முடிவினை மேற்கொண்டதாகவும் கூறியிருக்கிறார்.

உண்மையில் அவர் ஒட்சிசன் தருகிற முயற்சியில் ஈடுபடவில்லை. பொதுமக்கள் தலையிலே இந்தச் சுமைகளையெல்லாம் சுமத்தி இதுவரை அவர்களுக்குச் செலுத்தப்பட்டு வந்த ஒட்சிசன் குழாயை கழற்றி விட்டிருக்கிறார் என்பது தான் உண்மையாகும். இதுவரை வரலாற்றிலேயே இல்லலாத அளவிற்கு ஒரே நேரத்தில் மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, பேருந்துக்கட்டண உயர்வு ஆகிய மூன்று சுமைகளை தமிழக ஏழை, நடுத்தர மக்களின் தலையில் ஏற்றி அவர்கள் தலைகளை நொறுக்கிட வைத்த பெருமைக்குரிய ஜெயா என்று இந்தப் புவியே அவர் புகழ் பாடட்டும் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## லோக்பால் மசோதா நிறைவேற்றாவிட்டால் நாடுதழுவிய அளவில் போராட்டம்

(அலகாபாத்)

எதிர்வரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரிலேயே லோக்பால் மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் நாடுதழுவிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று கிரண்பேடி எச்சரித்துள்ளார்.

அலகாபாத்தில் ஊழலுக்கு எதிரான கருத்தரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய அன்னா ஹசாரேவின் குழுவைச் சேர்ந்த கிரண்பேடி மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

லோக்பால் மசோதாவை நிறைவேற்றும் கடமை காங்கிரஸ் கட்சிக்கே பெரும்பான்மையாக உள்ளது என்றும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியாகாந்திக்கும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மசோதா நிறைவேற்றப்படாவிட்டாலோ அல்லது வலுவில்லாத நிலையில் அறிமுகப் படுத்தப்பட்டாலோ ராம்லீலா மைதானத்தில் நடைபெற்றது போன்று நாடுதழுவிய அளவில் மிகப்பெரிய போராட்டம் நடைபெறும் என்றும் அவர் எச்சரித்தார்.

300 இற்கும் மேற்பட்ட நகரங்களில் இப் போராட்டம் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். சூழ்நிலையை தங்கள் இயக்கம் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் மத்திய அரசு தனது உறுதிமொழியை காப்பாற்றும் என்றும் நம்புவதாக அவர் தெரிவித்தார். (அ-2)

## கின்னசில் இடம்பிடிக்கும் ஜப்பானின் தொலைக்காட்சி கோபுரம்

(டோக்கியோ)

உலகிலேயே மிக உயரமான தொலைக்காட்சி கோபுரம் அமைத்து ஜப்பான் கின்னசில் இடம் பிடித்துள்ளது.

634 மீற்றர் உயரம் கொண்ட இந்த கோபுரம் டோக்கியோவில் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான கின்னஸ் சான்றிதழ் டோபுடவரின் தலைவர் மிஸ்ஹியாகி சுசுகியிடம் கின்னஸ் வேர்ல்டு ரெக்கார்ட தலைமைச் செயலர் அலிஸ்டர் ரிச்சர்ட்ஸ் கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளார்.

இதன்மூலம் ஜப்பானுடைய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உலகிற்கு தெரிய வந்துள்ளது. இந்த அங்கீகாரம் எங்களுக்கு மேலும் பலமாக அமையும். இதற்காகவே நாங்கள் முயன்றோம் என்று சுசுகி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன் சீனா 600 மீற்றர் உயரத்துக்கு கோபுரம் அமைத்ததுவே சாதனையாகவே இருந்தது. தற்போது அது முறியடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோபுரம் அடுத்த வருடம் மே மாதம் மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று தெரிகிறது. (அ-2)




மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளையொட்டி சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது படத்திற்கு முதல்வர் ஜெயலலிதா மலர் தூவி அஞ்சலி செலுத்தியதைப் படத்தில் காணலாம்.

## எகிப்தில் இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் கொந்தளிப்பு

(கெய்ரோ)

எகிப்தில் இராணுவஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் கொந்தளித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்குக்கு எதிராக கடந்த பெப்ரவரி மாதம் பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். 17 நாட்கள் போராட்டத்துக்குப் பின் முபாரக் பதவி விலகினார். அதைத் தொடர்ந்து ஆட்சி இராணுவம்வசம் ஒப்படைக்கப்பட்டது.

இதை தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார் என அறிவிக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில்அரசியல் சட்டத்தில் சில மாற்றங்களை செய்ய இராணுவ ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். இதற்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மேலும் முபாரக் பதவி விலகி இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் மக்களின் வாழ்வாதாரம் உயரவில்லை. முன்பு இருந்ததைவிட மிகவும் கீழ்நிலையில் உள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த மக்கள் நேற்று முன்தினம் தொழுகை முடிந்ததும் தலைநகர் கெய்ரோவில் உள்ள தக்ரீர் மைதானத்துக்கு ஊர்வலமாக வந்தனர். அங்கு திரண்ட ஒரு இலட்சம் மக்கள் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள்.

உடனே பாராளுமன்றத்தேர்தலை நடத்தி மக்கள் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என கோஷம் எழுப்பினர். இதேபோன்று எகிப்தில் 2 ஆவது பெரிய நகரமான அலெக்சாண்ட்ரியாவிலும் போராட்டம் நடந்தது. ஆயிரக்கணக்கான பெண்கள் மற்றும் இளைஞர்கள் வீதிகளில் திரண்டனர். இதனால் எகிப்தில் மீண்டும் பதற்றம் நிலவுகிறது. இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

## இந்திய நாட்டின் வர்த்தக கப்பலை தாக்கும் முயற்சியில் ஈடுபடும் சீனா

(பிஜிங்)

தென் சீனக்கடலில் ஏனைய நாட்டு கப்பல்களை குறிப்பாக இந்திய வர்த்தக கப்பல்களை தாக்கும் வேலையில் சீனா இறங்கியுள்ளது. தென் சீனக்கடல் முழுவதையும் சீனா தனக்கு சொந்தமானது என்று கூறிவருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் இந்தியா மற்றும் வியட்நாம் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி வியட்நாம் கடல் எல்லைக்குட்பட்ட தென் சீனக்கடலில் இந்திய எண்ணெய் வளம் கண்டறியும் மற்றும் தூரப் பயணப்பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்நிலையில் தென் சீனக்கடலில் பயணிக்கும் கப்பல்களை குறிப்பாக இந்திய வர்த்தக கப்பல்களை சீன மீன்பிடி மற்றும் கடல் ஆராய்ச்சி படகுகளைக் கொண்டு மோத விட்டு அதை விபத்து என்று சித்தரிக்கும் பணியில் சீனா இறங்கியுள்ளது. இதன் மூலம் சீனா குறித்த பயத்தை ஏனைய நாடுகளிடையே ஏற்படுத்தவும் அந்த நாடு முயன்று வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (அ-2)

# செவ்வாய்க்கும் நிலாவுக்கும் சென்றவர்களால்கூட பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியவில்லை

## படையெடுப்புக்களை முறியடித்தது எமது சமூகமே என்கிறார் பிரதமர்



செவ்வாய் கிரகத்திற்கும் நிலாவுக்கும் சென்றவர்களால்கூட பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாமல் போனது என்கிறார் டி.எம். வெள்ளைக்கொடி விவகாரத்தை மையப்படுத்தி நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் முயற்சி செய்தன. ஆனால், எந்தவொரு சக்திக்கும் அடிபணிவதில்லை என்பதை இலங்கை வரலாற்று ரீதியாக ஒப்புவித்துள்ளது என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிரகத்துக்கும் நிலாவுக்கும் சென்றவர்களால்கூட பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாமல் போனது.இலங்கை உள்நாட்டு பயங்கரவாதத்தை பல சவால்களுக்கு மத்தியில் முழு அளவில் தோற்கடித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகைலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் கடந்த முப்பது ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர இந்நாட்டு தலைவர்களும் முப்படையினரும் இன்னோரன்ன தியாகங்களை செய்தனர்.

முப்படையினரே வீட்டிலிருந்து வெளியில் வந்து சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலையை பெற்றுக் கொடுத்தனர். இவர்களுக்கு இலங்கையளர்கள் எந்நாளும் கடனாளிகளே ஆவார்.

இந்த யுத்த வெற்றிக்கு தலைமை தாங்கிய முப்படைகளினதும் தளபதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தனது 66 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார். இவரை உள்நாட்டில் மாத்திரமல்ல சர்வதேச நாடுகளிலும் பலர் வாழ்த்தியுள்ளனர்.

இலங்கையை ஆக்கிரமிக்க படையெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போது அதனை நேருக்கு நேர் நின்று தோல்வியடைய செய்த வீரமிக்க சமூகமே எமது சமூகமாகும்.

உலகத்தில் எந்தவொரு நாட்டினாலும் முடிவுக்கு கொண்டுவர முடியாமல் போன பயங்கரவாத போரை இலங்கை வெற்றிகரமாக முடிவடையச்செய்தது. ஆனால், வெள்ளைக்கொடி விவகாரம் ஊடாக நாட்டை அபகீர்த்தியடையச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, நாட்டிற்கு எதிரான அனைத்து சவால்களையும் தோல்வியடைச் செய்வோம். இன்று ஆசியாவில் மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடு இலங்கைதான் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சிறையில் பொன்சேகாவை பார்வையிட்ட அரசியல்வாதிகள்

வெள்ளக்கொடி விவகார வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜனநாயக தேசிய முன்னணியின் எம்.பி.க்கள் பலர் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் மேல் நீதிமன்றத்தில் இருந்து சிறைச்சாலை அதிபர்கள் அவரை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர்.அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. சுற்பையினரும்பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை, சிறைச்சாலைக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜிவ சேனசிங்க, அர்ஜுன ரணதுங்க, பாலித்த ரங்கே பண்டார உள்ளிட்டோர் சரத் பொன்சேகாவை பார்வையிட்டதுடன் அவருக்கு தேவையான வசதிவாய்ப்புக்களை நீதிமன்றத்தின் ஊடாக செய்து கொடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர். (அ-2)

## அரசாங்கம் ஒரு பொய்யை மறைக்க 10 பொய் கூறுகிறது

### ஐ.தே.க. எம்.பி. ஹர்சடி சில்வா

(கொழும்பு)

நட்டமடையும் நிறுவனங்களை சுவீகரிக்கும் சட்டத்தின் கீழ் மேலும் நிறுவனங்களை அரசாங்கத்தினால் சுவீகரிக்க முடியும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்ட மூலம் அறிமுகமாக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கை மீது அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்துள்ளன.

இதனை அறிந்த அரசாங்கம் அதனை மறைக்க 10 பொய்களை கூறுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்ட மூலத்தின் கீழ் 37 நிறுவனங்களை மாத்திரம்தான் சுவீகரிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளமை வேடிக்கையானது எனவும் அவ்வாறாயினும் சட்ட மூலத்தில் ஏன் உபசரத்துக்கள் இணைக்கப்பட்டன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

## நவாலியைச் சேர்ந்த சிறுவன் ஜேர்மன் விபத்தில் உயிரிழப்பு

(நவாலி)

ஜேர்மனியில் வசித்து வரும் சிறுவன் ஒருவன் விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் கடந்த 17 ஆம் திகதி பி.ப.4 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தனது தாயாருடன், பாடசாலையிலிருந்து நடந்து வந்து வீதியைக் கடப்பதற்காக வீதி விளக்கு சமிக்ஞையை பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்த போதே மிக வேகமாக வந்த கார் ஒன்று மோதியதில் சிறுவன் தூக்கி வீசப்பட்டு அவ்விடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் சிவகுமார் சுஜித் (வயது 5) என்ற சிறுவனே உயிரிழதுள்ளார்.

இறந்தவருடைய பெற்றோர் நவாலி சின்னப்பா வீதியில் வசித்து பின் புலம் பெயர்ந்து ஜேர்மனிக்கு சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-26)

## ஈழத்தமிழர்களை திருப்பி அனுப்பும் நாடுகள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

### ஜயலத் எம்.பி.கோரிக்கை



(கொழும்பு)

தஞ்சமடைந்த தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகள் பொறுப்புடன் செயற்படவேண்டும்.குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சுவிஸ் நாட்டின் அகதிகள் காப்பகம் ஆகியவை மேற்படி பிரச்சினை தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கூறுகையில், சர்வதேச நாடுகளில் தஞ்சம்கோரி அகதிகளாக சென்றவர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையானது, தற்போது மேற்கொள்ளப்படக்கூடாது என்று பல்வேறு நாடுகள்,அகதிகள் காப்பகங்கள் கூறிவருகின்றன.எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளர் மேற்படி விவகாரம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் யானைகளுக்கும் ஓட்டப்போட்டி


தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் யானையோட்டப் போட்டிகளைக் காணும் அரிய வாய்ப்பு இன்று மக்களுக்குக் கிடைக்கும். மணித்தியாலத்திற்கு 80-100 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இவ்வீதி எதிர்வரும் 27 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யானையோட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம், சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் உட்பட பல விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணிவரை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் இடைமாற்ற நிலையங்களுக்கிடையில் நடைபெறவுள்ளதாக நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவ தெரிவித்தார்.

கொட்டாவ, கஹாதுடுவ, களனிகம, தொடங்கொட, வெலிபன, குருந்துக ஹதெக்கம, பத்தேகம, பின்னதுவ முதலான இடங்களில் இந்த இடைமாற்ற நிலையங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யானையோட்டப் போட்டி பண்டாரகமவிலும் மரதன் ஓட்டப் போட்டி கஹாதுடுவையிலும் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி பிரதேசங்களைச் சூழவுள்ள உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்தோருக்கிடையில் தலா 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. எனினும் விரும்பிய எவரும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றலாம் என பிரதியமைச்சர் கொத்தலாவல கூறினார்.

போட்டிகளின் முடிவில் கண்கவர் வான வேடிக்கைகள் இடம்பெறவுள்ளன. சிறுவர்களுக்கான ஓவியப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (அ-2)



கிளிநொச்சி பண்பாட்டுப் பேரவையின் பண்பாட்டு விழா கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலைக்கிளி விருது பெற்ற கலைஞர்களுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி விருது வழங்கி கௌரவிப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

# எந்தக் கட்சியில் இருந்தாலும் வாக்களித்த மக்களுக்கு கடமையை சரியாக செய்யவேண்டும்

## பிரபா கணேசன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஊதுகுழலாக அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள் என்று தேசிய பட்டியல் எம்.பி. யோகராஜான் தெரிவித்திருக்கிறார்.

1994 ஆம் ஆண்டு சந்திரிகா இருந்த காலம் முதல் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இவ்வாண்டு வரை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட யோகராஜன் எம்.பிக்கு இன்று திடீர் ஞானம் பிறந்திருப்பது ஆச்சரியத்திற்குரிய விடயமாக இருக்கிறது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலை வரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தின் ஊதுகுழலாக செயற்பட்டு தமிழ் தலைவர்களை ஏகபிரதிநிதிகள் இல்லைஎன்றுநான் தெரிவித்திருப்பதாக ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கும் யோகராஜன் எம்.பி. நான் எதை தெரிவித்துக் கொள்கின்றேன் என்பதை புரிந்து கொள்ளவில்லை. யோகராஜன் ஐக்கிய தேசியக் கட்சி நுவரெலியா மாவட்ட அமைப்பாளராக இருகின்றார்.

அவர் இந்திய வம்சாவளி மக்களைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதை புரிந்து கொள்ளவில்லை. எனது கருத்தான தமிழ் தேசிய கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் இல்லை என்றும் இந்தியவம்சாவளி மக்களையும் பேச்சுவார்த்தையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை விமர்சிக்கும் யோகராஜன் எம்.பி. எப்படி இந்திய வம்சா வளிமக்கள் நூற்றுக்கு நூறு வீதம் வாழும் நுவரெலியா மாவட்டத்திற்கு அமைப்பாளராக செயற்படுகிறார்.

பத்திரிகைகளுக்கு அறிக்கை எழுதும் பொழுது, தான் எங்கே நிற்கின்றோம் என்பதை புரிந்து கொண்டும் மற்றவர்களை விமர்சிப்பதை மட்டும் வைத்து அரசியல் செய்வதை இவரைப் போன்றவர்கள் கைவிட வேண்டும். இவர் அரசாங்கத்திலும் ட்ரஸ்ட் நிறுவனத்திலும் தலைவராக செயற்பட்டபோதும் இந்திய வம்சாவளி மக்களுக்காக எவ்வாறு செயற்பட்டார் என்பதை ட்ரஸ்ட் நிறுவனம் மூலம் நன்மை பெறாத நுவரெலியா மாவட்டத்தையும் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்கள் வாழும் ஏனைய மாவட்டத்தை சார்ந்தவர்களும் நன்கு அறிவார்கள்.

இன்று நான் அரசாங்கத்தில் இருந்து கொண்டு கொழும்பு மாவட்ட தமிழ் மக்களுக்கும் ஏனைய மாவட்ட மக்களுக்கும் முழுமையான சேவையினை செய்து வருகிறேன். அதேபோல் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய அமைச்சர்களும் அவர்களது மட்டத்தில் மக்களுக்கான சேவையை செய்து வருகிறார்கள்.

அதேபோல் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி தலைவர்களும் பொறுப்பான எதிர்க்கட்சியினராக செயற்பட்டு வருகின்றார்கள்.

இதுவே இன்றைய காலகட்டத்திற்கு தேவையாகும். அதனால் தமிழ் அரசியல்வாதிகள் ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் மீது சேறு பூசுவதை தவிர்த்து ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி தன் கடமைகளை சரிவர செய்வதே வாக்களித்த எமது சமூகத்திற்கு செய்யும் கைமாற்றாகும். (அ-2)

# 20 பேர் தாயகம் திரும்பினர்

சவுதி அரேபியாவில் நிர்க்கதி நிலைக்குள்ளாகியிருந்த 20 இலங்கைப் பணியாளர்கள் நேற்று முற்பகல் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை திரும்பியுள்ள பணியாளர்களை அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டுநாயக்க விமானநிலைய அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பளம் வழங்கப்படாமை, எஜமானர்களின் துன்புறுத்தல்கள் மற்றும் விசா காலாவதியானமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இந்த பணியாளர்கள் சவுதி அரேபியாவில் நிர்க்கதிக்குள்ளாகி இருந்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கிறது. (அ-2)

# ஆட்பதிவு திணைக்களத்தின் விசேட நடைமுறைகள்

ஆட்பதிவு திணைக்களத்தின் நடவடிக்கைகளை சனிக்கிழமைகளிலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் ஜகத் பி.விஜயவீர இதனைத்தெரிவித்துள்ளார்

கல்விப் பொதுத்தர சாதாரணதர பரீட்சைகள் நடைபெறவிருப்பதால் சனிக்கிழமைகளிலும் ஆட்பதிவு திணைக்களத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி வரையில் இந்த விசேட நடைமுறை காணப்படும். பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர் உள்ளிட்ட யாரேனும் வந்து அவர்களின் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாட்டின் எப்பாகத்திலுமுள்ள மக்களுக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்

(கொழும்பு)

மலைநாட்டுத் தமிழர்களோ, கொழும்புத் தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ எவராக இருந்தாலும் அவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். வடக்கு ,கிழக்கு மக்கள் அரசாங்கத்தினால் மிகவும் மோசமான நிலைமைக்கு கொண்டு செல் லப்படுகின்றார்களென சுரேஸ் பிரேமச் சந் திரன் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மக்கள் இலங்கை அரசாங்கத்தினால் மிகவும் மோசமான நிலைமைக்கு கொண்டுசெல்லப்படுகின்றார்கள். ஆகவே அவர்களின் பிரச்சினை ஒரு முதன்மையான பிரச்சினையாக இருப்பதனால் அப்பிரச்சினைக்கு தீர்வு காணும்பட்சத்தில் ஏனைய சிறுபான்மை மக்களின் பிரச் சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வடக்கு, கி ழக்கில் போட்டியிட்டதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பது உண்மை என்பதுடன் அந்த மக்களுக்காக குரல் கொடுக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் தமக்கிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதற்காக ஏனைய பிரதேசத்தில் இருக்கக்கூடிய சிறுபான்மை மக்களை தாங்கள் மறந்துவிட்டோம் என்று அர்த்தமல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்காக மாத்திரம் குரல் கொடுத்து வருவதாகவும் ஏனைய சிறுபான்மை மக்களின்பிரச்சினைகளுக்க குரல்கொடுப்பதில்லை என்ற பரவலான கருத்து நிலவுகின்றமை குறித்து குறிப்பிடு கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ-2)

# வெள்ளைக் கொடி வழக்கின் பிரதான சாட்சியாளர் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

வெள்ளைக்கொடி வழக்கின் பிரதான சாட்சியாளரும் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான பெட்ரிக்கா ஜேன்ஸ் வெளிநாடு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளை கொடி வழக்கு தொடர்பான தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ள நிலையில் பெட்ரிக்கா வெளிநாட்டுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை பெட்ரிக் ஜேன்ஸ் செவ்வியெடுத்திருந்தார்.

சண்டேலீடர் பத்திரிகையின் முகாமைத்துவ பணிப்பாளர் லால் விக்ரமதுங்கவும் வெளிநாடு பயணம் செய்துள்ளதாகத் குறிப்பிடப்படுகிறது.

கொழும்பு உயர் நீதிமன்றில் ட்ரயல் அட் பார் நீதிவான் குழாம் நேற்று முன்தினம் வெள்ளைக் கொடி வழக்கு குறித்த தீர்ப்பை அளித்துள்ளது. (அ-2)

# அதிகரித்துச் செல்லும் நீரிழிவு நோயாளர் எண்ணிக்கை

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் 522 மில்லியன் பேர் நீரிழிவு நோயினால் பீடிக்கப்படலாம் என சர்வதேச ஆய்வுகள் கூறுகின்றன.

வயது வந்த 10 பேரில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக சர்வதேச நீரிழிவு சம்மேளனம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதுமை, சனத்தொகை மாற்றம் ஏனைய காரணிகளை அடிப்படையாக கொண்டு சர்வதேச நீரிழிவு சம்மேளனம் இந்த ஆய்வை நடத்தியிருந்தது.

இதேவேளை உலகளாவிய ரீதியில் தற்போது சுமார் 346 மில்லியன் நீரிழிவு நோயாளர்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பீடு செய்துள்ளது. (அ-2)

# சஜித்தின் கோரிக்கைக்கு ரணில் மதிப்பளிக்க வேண்டும்

## ஐ.தே.க. பிரதித்தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

சஜித்தின் கோரிக்கையை பூர்த்தி செய்யுமாறு எழுத்து மூலம் தாம் ரணிலிடம் கோரியதாக கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப்பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கோரிக்கைக்கு கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மதிப்பளிக்க வேண்டுமென மற்றுமொரு இணைப் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறு சஜித் பிரேமதாச கோரியிருந்தார்.

சஜித்தின் கோரிக்கையை பூர்த்தி செய்யுமாறு எழுத்து மூலம் தாம் ரணிலிடம் கோரியதாக கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவாக செயற்படுமாறு ரணிலிடம் தாம் கோரியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் (அ-2)

# தேசியமயப்படுத்தும் திட்டம் தொடர்பில் இந்தியா கவனம்

(கொழும்பு)

இந்திய நிறுவனங்கள் சிலவும் தேசியமயப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நிறுவனங்களை தேசிய மயப்படுத்தும் சர்ச்சைக்குரிய சட்டம் குறித்து இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய நிறுவனங்கள்சிலவும் தேசிய மயப்படுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த சட்ட மூலத்தின் ஊடாக தமது முதலீட்டாளர்களுக்கு எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் என்பதனை இந்தியா உன்னிப்பாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட சில இந்தி நிறுவனங்களையும் தேசிய மயப்படுத்தும் பட்டியலில் அரசாங்கம் உள்ளடங்கியுள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் இந்திய முதலீட்டாளர் ஒருவர் ஏற்கனவே இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையில் நேரடி முதலீடு செய்யும் பிரதான நாடாக இந்தியா திகழ்கிறது. (அ-2)

உண்மை ஊடுருவும் சூரிய ஒ ளிபோன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது. - மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஒருவருக்கு இப்போது தண்டனை மற்றவர்களுக்கு தண்டனை ஒத்திவைப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருட சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்துள்ளது.

மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்ப்பில் இரண்டு நீதிபதிகள், சரத் பொன்சேகாவை குற்றவாளியாகக் கண்டுகொள்ள, ஒரு நீதிபதி சரத் பொன்சேகா குற்றவாளி அல்ல என்று தனது தீர்ப்பை வழங்கினார்.

ஜனநாயகத்தின் அடிப்படையில் மூன்று நீதிபதிகளில் இரண்டு நீதிபதிகள் குற்றவாளியென தீர்ப்பு வழங்கியதன் காரணமாக சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டினார்.

அவரின் பதவியேற்பு அவரின் 60 ஆவது பிறந்த நாளன்று இடம்பெற்றது.

இதன் பின்னர் வன்னி யுத்த வெற்றியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஈட்டியபோது, சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்து வன்னிப் போரின் வெற்றியை - விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட செய்தியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இவையெல்லாம் நடந்து முடிய மீண்டும் ஜனாதிபதித் தேர்தல்.

இத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் போட்டியிட்டனர்.

முடிவு, மகிந்த ராஜக்ஷவுக்கு ஜனாதிபதிப் பதவியும் சரத் பொன்சேகாவுக்கு சிறைவாசமும் கிடைத்தது.

இதில் அதிசயமான உண்மையென்னவெனில் நேற்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 66ஆவது பிறந்த நாள் அன்று சரத் பொன்சேகாவுக்கு 3 வருட சிறைத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

என்ன செய்வது! போர் வெற்றியை அறிவித்தவர் 3 ஆண்டு சிறைத் தண்டனையை ஏற்றுக் கொள்கிறார் என்றால், ஊழ்வினையின் விளையாட்டு பலமாக இருக்கின்றது என்று கருத வேண்டியுள்ளது.

வன்னிப் போரின்போது அங்கே...இங்கே... அந்த...இந்த ... என்று குண்டுகளைக் கொட்டி அப்பாவிகளின் உயிர்களைப் பலியெடுத்த பாவம் சரத் பொன்சேகாவை விடுவதாக இல்லை.

அப்படியானால் சரத் பொன்சேகாவுக்கு மட்டும்தான் அப்படியா? என்று நீங்கள் கேட்கலாம். ஒருபோதும் இல்லை.

வன்னி மக்களின் அவலத்தில் யார்யாரெல்லாம் பங்கேற்றார்களோ அவர்களுக்கு எல்லாம் தண்டனை உண்டு.

ஆனால், அதற்கான காலம் மட்டுமே ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் வெற்றிக்கிண்ண போட்டியில்

# முல்லைத்தீவு அரச செயலக அணியும் மாந்தை கிழக்கு பி.செ. அணியும் அரையிறுதிக்கு தெரிவு

(மல்லாவி)

முல்லை. அரச அதிபர் வெற்றிக்கிண்ண அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் முல்லை மாவட்ட தபாற் திணைக்கள அணியும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணியும் முல்லை மாவட்ட அரச செயலக அணியும் அரையிறுதி போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

மேற்படி போட்டியானது கடந்த 15 ஆம் திகதி முல்லை மாவட்ட அரச அதிபர் ஏ.பத்திநாதன் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் களமிறங்கிய முல்லை மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணியுடன் முல்லை மாவட்ட தபாற் திணைக்கள உத்தியோகத்தர் அணி மோதி 4:0 என்ற கோல்கண க்கில் வெற்றியீட்டியது.

இன்னுமொரு சுற்றில் களமிறங்கிய மாந்தை கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் அணியுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர் அணி மோதி 2:1 என்ற கோல் கணக்கில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் அணி வெற்றியீட்டியது.

அடுத்த சுற்றில் விளையாடிய கரைத்துறைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர் அணியும் முல்லை மாவட்ட அரச செயலக உத்தியோகத்தர் அணியும் மோதி 1:0 என்ற கோல்கணக்கில் முல்லை மாவட்ட அரச செயலக உத்தியோகத்தர் அணி வெற்றியீட்டியது.

அரையிறுதிப் போட்டிக்கு தெரிவான அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மு/வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (அ-3-15)

## மாணவர்களுக்கு கருத்தரங்கு

இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி கணிதம், விஞ்ஞானம் தொடர்பான கருத்தரங்கொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நடைபெறவுள்ளது.

எனவே இக்கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

## மின்தடைபற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் நாளை திங்கட்கிழமை முதல் 27 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை பல்வேறு இடங்களில் மின்சாரம் தடைப்படும் என யாழ்.பிராந்திய பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை, எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை, 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய இடங்களில் காலை முதல் மாலை வரை மின்விநியோகம் தடைப்படவுள்ளது.

நாளை மறுதினம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, எதிர்வரும்25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினை பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களில் காலை முதல் மாலை வரை மின்விநியோகம் தடைப்படவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)


# இல்லாருக்கு எல்லாமுமாக இருந்து கிறிஸ்து அரசரின் ஆட்சியை எமதாக்குவோம்

இன்று கிறிஸ்து அரசர் பெருவிழா. எமது சமூகத்தை, நாட்டை, ஆண்டுக்கு ஆண்டு மாறும் அரசாங்கங்கள் ஆட்சி செய்கின்றன. ஆனால் நல்லாயனாகிய கிறிஸ்து நமது அரசரே. அவரது ஆட்சி எத்தனை ஆண்டுக்கும் மாறாது.

அரசனின் கடமை தன் ஆளுகைக்குட்பட்ட மக்களை குறையின்றி பேணி காப்பது என்பதை பல ஆட்சியாளர்கள் இன்று மறந்து விடுகின்றனர். ~~முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறைறயென்று வைக்கப்படும் || என்பார்கள்.

கூறித்தான் ஆக வேண்டும். முதல் உலகப் போரின் விளைவாக 1918 ஆம் ஆண்டு ஆளும் அதிகாரம் மதத்யையும் கட்டுப்படுத்தத் தொடங்கியது. 1922 இல் சர்வாதிகாரி முசோலினி இத்தாலியை ஆண்டு வந்தார். 1924 இல் கிட்லரின் புத்தகம் நாசிச-கம்யூனிச மற்றும் இன வேறுபாடு கொள்கைகளை பரப்பியது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் நிரந்தரமில்லா பதவியை பற்றிக் கொண்டு கடவுளுக்கு மேலாக தங்களை உயர்த்திக் கொண்ட இப்போலி தலைவர்களிடம் இருந்து மக்களை பாதுகாக்க 11-12-1925 இல் அன்று திருத்தத்தை

இன்னல்களுக்குள் உட்பட்ட எந்த மனிதருக்கு நாம் உதவும் போது கடவுளுக்கே உதவுகின்றோம். பிறருக்கு உதவ நாம் மறுக்கும் போது கடவுளுக்கே உதவ மறுக்கின்றோம். மிகச் சிறியோராகிய சகோதரர், சகோதரிகள் பசியைப் போக்கிய



போது, தாகம் தீர்த்த போது, அவர்களை ஏற்றுக் கொண்ட போது, ஆடையணிவித்தபோது, நோய் பார்க்கச் சென்றபோது, சிறைக்குச் தேடிச் சென்ற போது கடவுளுக்கே செய்திகள் என உறுதியாக எங்களுக்குச்

## பரமபிதா காட்டிய பாதை

ஆகவே காத்தல் அரசனின் சிறப்புக் கடமை, பண்பு. இன்று நாம் காணும் ஆட்சியாளர்கள் இருக்குமட்டும் இருப்போம். அதுவும் பணமும் பதவியும் பலமும் பாதுகாப்பும் சொத்தும் சுகபோக வாழ்வும் நிரம்பி இருப்பதே அனைத்துமான அரச வாழ்வு என்று ஆட்சியுரிமையை நம்பி வாழ்கின்றார்கள். அவர்கள் எவ்வாறு அழிகிறார்கள் என்பது வரலாறு காட்டும் பாடமாகும். முகமது கடாபி, சதாமுசைன், கிட்லர், முசோலினி, சர்வாதிகாரி ஸ்டாலின் போன்றவர்கள் எல்லாம் இவ்வகை ஆட்சியில் அழிந்தவர்கள்.

இவர்கள் நினைத்த ஆட்சி நிரந்தரமில்லாமையினால் போயிற்றே. பல ஆண்டுகளாக தீர்வு காண பிரச்சினையான நமது நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படுவதற்கும் இவ்வாறான ஆட்சியாளர்களே காரணம் எனலாம்.

அனைத்திற்கும் பின்புற அதிகாரம் ஆட்சியுரிமையையே முழுமையாக நம்பிவாழும் சிலரால் தீர்வுக்கான பிரச்சினைகளாக இவைகள் தொடர்கின்றன.

இங்கு ஏன் கிறிஸ்து அரசர் பெருவிழா ஆரம்பிக்கப்பட்டது என்று பதினொராம் பத்திநகர் இத்திருவிழாவை ஏற்படுத்தி ஒவ்வொரு திருவழிபாட்டு இறுதி ஞாயிறிலும் நினைவுகூர்ந்து அனைத்து காலங்களிலும் சூழல்களிலும் இல்லாருக்கு எல்லாமுமாக இருப்பவர் கிறிஸ்து அரசரே என உணர்த்தினார்.

இன்று கிறிஸ்து அரசர் கூறுவது மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுக்குள் ஒருவருக்கு நாங்கள் உதவும் போது கடவுளுக்கே உதவுகின்றோம். ஆகவே இங்கு சிறியோர் என்பவர்கள் யார்? இல்லாமையை அனுபவிப்பவர்கள் உணவு, உடை, இடம், கவனிப்பு இல்லாமை, இவர்களுக்கு எல்லாமுமாக இருப்பதே கிறிஸ்து அரசரின் பிரசன்னம், அரசுரிமை. இந்த நற்செயலை தொடர்ந்து நாம் செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்தவர்கள் மட்டும் தான் சகோதரி, சகோதரர்கள்என்று விளக்கிக் கூறவில்லை. மாறாக பசி, தாகம், அந்நியராயிருத்தல், ஆடையின்மை, நோய், சிறைப்படல்போன்ற இன்னல்களில் உழல்வோர் யாராயிருந்தாலும் அவர்கள் தன் ~~சகோதரர் சகோதரிகள் || ஆவர் என எடுத்துக் கூறியது உண்மையே.

கடவுளன்பும் பிறரன்பும் இங்கே இணைவதைப் பார்த்திருக்கின்றோம்.

**ம. பிரான்சிஸ்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

சொல்லுவார்.

இவ்வாறு மக்களினத்தாருக்கு தீர்ப்பு வழங்கப்படுவது பற்றி இயேசு போதித்த காலத்தில் மக்களுக்கு இருந்த தேவைகள் இன்றும் தொடர்ந்து நிலவுகின்றன.

பிறரன்பு என்பது குறிப்பாக ஏழை எளியோர் மட்டில் காண்பிக்கப்பட வேண்டும் என்னும் இயேசுவின் போதனையை நாம் கடைப்பிடித்தால் இறுதி நாளில் நமக்கு வழங்கப்படும் தீர்ப்பு நல்லதாக அமையும்.

அன்பில்லாமை - ஆதரவில்லாமை- கவனிப்பில்லாமை-ஏற்றுக் கொள்ளுதலில்லாமை-மனித நேயமில்லாமை இந்த இல்லாமைகளை நீக்கி அவர்களுடன் சேர்ந்து உழைக்க நாம் எல்லாமுமாகுவோம். இப்போதும் கிறிஸ்து அரசரின் ஆட்சி நிச்சயம் நமதாகும்.

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கல் இழுத்தடிக்கப்படுகிறது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

**வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தாமல் இழுத்தடிக்கப்படுவதற்கு அரசின் பாகுபாடான செயற்பாடுகளே காரணம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் பின்னரான வடக்கு மாகாணத் துரித அபிவிருத்திக்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தினால் வடக்கில் மின்சாரம் வழங்கும் செயற்பாடுகள் உரிய காலத்துள் நிறைவேற்றப்படாமைக்கு மின் உபகரணக் கொள்வனவில் சீன நிறுவனத்துடனான ஒப்பந்தப்படி பணம் செலுத்தாமையே காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இக்காலப்பகுதியில் வடக்கில் மட்டும் வீதியோரக் குறைவழுத்த மின்கம்பிகள் இதுவரை 900 கிலோமீற்றர் வரையே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும் 1100 கி.மீ. மின்கம்பிகள் இடுவது ஏற்கனவே திட்டமிட்டபடி இடம்பெறாது இடை நடுவே நிறுத்தப்பட்டுள்ளது.

இத்துடன் தூண்கள் நிறுவப்படவுள்ள 250 கி.மீ. தூரத்திற்குரிய குறைவழுத்த மின்கம்பிகள் இதுவரை கிடைக்காததால் இணைப்பு வேலைகள் இலங்கை மின்சார சபையினால் பாதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனைவிட மீள்குடியேற்றக் கிராமங்களுக்கென மேலதிகமாக ஆயிரத்து 500 கி.மீ.வரை இன்னமும் மின்கம்பிகள் பொருத்தப்பட வேண்டியுள்ளதாகவும் கணக்கெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மின்னிணைப்பு உபகரணங்களான காவலிகள், கடத்திகள், போல்ட் மற்றும் நட்டுகள், 33 கிலோ வாற்று (33 KW) மின்கம்பிகள், தூண்களுக்கான கம்பிபார்கள், குறுக்குச் சட்டங்கள் மற்றும் எல்.ரி. 240 ஏரியல் பண்டிள் கேபிள்கள் உட்பட இதர பொருத்துப் பொருட்களும் இதுவரை சீன நிறுவனத்தால் வழங்கப்படாதுள்ளன.

காலங்காலமாக இந்தியாவிடமிருந்து கொள்முதல் செய்துவரப்பட்ட காவலிகள் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டன. கொம்பிளான்ற் என்னும் சீன நிறுவனம் ஒன்றுடன் கடன் அடிப்படையிலேயே அரசு இப்பொருட்களைக் கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அரசு அந்நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டும். இதனடிப்படையில் சீன அரசு கட்டம் கட்டமாக அந்நிறுவனத்திற்கு நிதியினை வழங்கும்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி மீள்கட்டுமானங்களுக்கு உலக வங்கியால் ஒதுக்கப்பட்ட தொகையான ஆயிரத்து 569 மில்லியன் ரூபாவில் இதுவரை இவ்வாண்டிற்கென உபயோகிக்கப்பட்ட 376 மில்லியன் ரூபாய் போக பெருந்தொகை மிகுதிப்பணம் திரும்பிச் செல்லும் அபாயம் உள்ளதோடு அடுத்த ஆண்டிற்கென எத்தகைய அபிவிருத்திக் கொடுப்பனவும் உலக வங்கியினால் வழங்கப்படாத நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் வடக்கிற்கான மின்வழங்கலில் கொள்வனவிற்கே பணம் இல்லை என்கின்ற அவல நிலையும் அரசாலும் அதன் நிர்வாக மட்டத்தாலும் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டு இப்பிரதேசம் அபிவிருத்திக்குட்படாமல் பார்த்துக்கொள்வதே அரசின் நிரந்தரக் கொள்கையாக நிலைகொண்டுள்ளதாக? என எமது மக்கள் விரக்தியடைந்துள்ளார்கள்.

எனவே, சாலை ஓரத்திலுள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு மின்சாரத்திற்காக மாதக் கணக்கில் தவம் கிடக்கும் மக்களையும் வீதிக்கு மின்சாரம் வந்து விட்டது. எப்பொழுது வீட்டிற்கு வரும் என்று வழிமேல் விழிவைத்துப் பார்த்திருக்கும் மக்களையும் இனியும் ஏமாற்றாமல் உரிய நடவடிக்கை எடுத்து மின்சாரம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டி இருப்பதனால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கீழ்வரும் பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். சுன்னாகம்,மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப்பிர தேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.(அ)

# மீன்பிடியை கட்டுப்படுத்தினால் தற்கொலை செய்வதே வழி

## தமிழக மீனவர்கள் ஆதங்கம்

(கொழும்பு)

தமது மீன்பிடித்தொழிலை இந்திய கடற்பரப்புக்குள் மாத்திரம் கட்டுப்படுத்தினால் தற்கொலை செய்துகொள்வதை தவிர வழியில்லை என்று தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீனவர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை-இந்திய கடல் எல்லையில் தமிழக மீனவர்களுக்கு இந்திய கரையோரப் படையினர் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று சட்டத்தரணி ஸ்டாலின் மதுரை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஏற்ற நீதிமன்றம் கரையோர பொலிஸாருக்கு அதற்கான உத்தரவை பிறப்பித்திருந்தது.

எனினும் உரிய திகதியில் அது நிறைவேற்றப்படாமையை அடுத்து மனுதாரர் சார்பில் நீதிமன்ற அவமதிப்பு என்ற அடிப்படையில் கரையோர பொலிஸாருக்கு எதிராக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து மன்றில் தமது சாட்சியத்தை கடந்த புதன்கிழமை பதிவு செய்த இந்திய கரையோர பொலிஸ் பாக்கு நீரிணை பகுதியில் ஒரு தாக்குதல் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையால் இந்திய- இலங்கை கடல் எல்லைப் பகுதியை மீன்பிடி அற்ற பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று கோரியது.

அத்துடன் இந்திய எல்லைக்கு அப்பால் சென்று தமிழக மீனவர்கள் தொழிலில் ஈடுபடும்போது அவர்களுக்கு இலங்கை க[illegible]லுக்குள் சென்று தம்மால் பாதுகாப்பு வ[illegible]ங்க முடியாது என்றும் கரையோரப் பாது[illegible]ப்பு பிரிவு தெரிவித்தது. எனினும் இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது வரையில் எவ்வித கடல் வரையறையும் இருக்கவில்லை என்று தமிழக மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்திய கடல் எல்லைக்குள் மாத்திரமே தமது தொழில் முடக்கப்படுமானால் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தமிழக மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# பிறப்புச்சான்றிதழ் வழங்கல்

(இராமநாதபுரம்)

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் முகாமில் நேற்று இலங்கைத் தமிழர் குழந்தைகள் 187 பேருக்கு இலங்கை நாட்டின் பிறப்புச்சான்றிதழ் அளிக்கப்பட்டது.

மண்டபம் முகாமுக்கு வந்து பார்வையிட்ட இலங்கை அதிகாரிகள் இந்தச் சான்றிதழ்களை வழங்கினர். மேலும் அகதிகள் முகாமில் சிறப்பான முறையில் நடத்தப்படுவதாக கூறிய அவர்கள் அகதிகள் மறுவாழ்வுக்கு தேவையான அனைத்தையும் மேற்கொண்டு வருவதாகக் கூறினர். (4-2)

# யாழ்.,கிளி.மாவட்ட ஆலய புனரமைப்புக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 214 இந்து ஆலயங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா ஆலய புனரமைப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது.இந் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக பிரதமரும் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமான தி.மு. ஜயரட்ண கலந்து கொண்டதோடு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின், யாழ் .மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசு, யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள், மதகுருமார்கள்,ஆலய பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# இல்லம் திறந்து வைத்தல்

(யாழ்ப்பாணம்)


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 25 ஆவது இளைஞர் தினத்தினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் துருணு சவிய வீட்டுத்திட்டம் -2011 நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற வேலணை பிரதேச செயலர் பிரிவின் வீடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.37 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள்மன்ற அதிகாரி அறிவித்துள்ளார்.(அ)



சமய நிறுவனா[illegible]ளை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் கீழ் இந்து ஆ[illegible]யப் புனரமைப்புக்காக காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.சமய கலாசா[illegible]ழ்வி[illegible] விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை[illegible]ம் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதமரும் புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமான தி.மு.ஜயரட்ண ஆலய பிர[illegible]நிதிகளிடம் காசோலையை வழங்குவ[illegible]யும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள் அலுவலக செய்தியாளர், என்.குமார்)*

# அம்லா, டி வில்லியர்ஸ் அபாரம்; தென்னாபிரிக்கா சரிவிலிருந்து மீண்டது



(ஜோகனஸ்பேர்க்)

அம்லா, டி வில்லியர்ஸின் அபார ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களையிழந்து 229 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்றகணக்கில்முன்னிலையில்உள்ளநிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 17ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 266 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏ.பி.டி வில்லியர்ஸ் 64 ஓட்டங்களையும்ஜக்கலிஸ்54ஓட்டங்களையும்எடுத்தனர்.

பந்து வீச்சில் சிடில் 3 விக்கெட்டுக்களையும் லியோன், மைக்கல் கிளார்க் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜோன்சன், அறிமுக வீரர் ஹம்மின்ஸ், வோட்சன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 296 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆரம்ப ஜோடிகளான ஷேன்வோட்சன், ஹக்ஸ்தலா 88ஓட்டங்களையும்ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் ஸ்ரையின் 4 விக்கெட்டுக்களையும் இம்ரான் தாகீர் 3 விக்கெட்டுக்களையும் பில்லாண்டர், மோர்கல் கலிஸ் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 30 ஓட்டங்களால் பின்னிலை பெற்ற தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 90 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

எனினும் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த அம்லா-டி வில்லியர்ஸ் ஜோடி அபார ஆட்டத்தை வழங்கி அணியை மீட்டனர்.

இந்நிலையில் மூன்றாவது நாளான நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்மைகாரணமாக முன்னதாக நிறுத்தப்பட்ட போது தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களையிழந்து 229 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அம்லா 89, டி வில்லியர்ஸ் 70 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில்



உள்ளனர்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் ஹம்மின்ஸ் 2 விக்கெட்டுக்களையும் லியோன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். இப் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஆயிரம் விக்கெட்

கிரிக்கெட் அரங்கில் சுழல் ஜாம்பவான்களான இலங்கையின் முத்தையா முரளிதரன், அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் ஆகியோர் ஆயிரம் விக்கெட்டுக்களுக்கு மேல் சாய்த்துள்ளனர்.

டெஸ்ட் (800 விக்.,) மற்றும் ஒருநாள் (534 விக்.,) போட்டியில் அதிக விக்கெட் கைப்பற்றியுள்ள இலங்கை அணியின் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரன், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மொத்தம் ஆயிரத்து 347 விக்கெட் (800+534+13) சாய்த்துள்ளார். இவர் சர்வதேச இருபது - 20 போட்டியில் 13 விக்கெட் கைப்பற்றியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் சுழல் மன்னன் ஷேன் வோர்ன், டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட் (708 விக்.,) வீழ்த்தியுள்ள வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். ஆனால் ஒரு நாள் போட்டி அரங்கில் இவர், 293 விக்கெட் மட்டுமே கைப்பற்றி 12 ஆவது இடத்தில் உள்ளார்.

சர்வதேச இருபது - 20 அரங்கில் இவர், ஒரு போட்டியில் கூட விளையாடவில்லை. இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மொத்தம் ஆயிரத்து ஒன்று விக்கெட் கைப்பற்றி இரண்டாவது இடம் பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அதிக விக்கெட் சாய்த்த முதல் -5 பந்துவீச்சாளர்கள்,

| வீரர் | போட்டி | விக்கெட் |
|---|---|---|
| முரளிதரன்(இலங்கை) | 495 | 1347 |
| வோர்ன் (ஆஸி.) | 339 | 1001 |
| கும்ளே(இந்தியா) | 403 | 956 |
| மெக்ராத்(ஆஸி) | 376 | 949 |
| அக்ரம்(பாக்.) | 460 | 916 |



தென்கிழக்கு ஆசிய விளையாட்டில், ரிதமிக் ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் திறமையை வெளிப்படுத்திய சிங்கப்பூர் வீராங்கனை இலின்பான்

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் டிராவிட், லக்ஸ்மன் முன்னேற்றம்

(டுபாய்)

ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் ராகுல் டிராவிட் (8வது இடம்), லக்ஸ்மன் (13வது இடம்) ஆகியோர் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர்.

டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தர வரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டுபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் ராகுல் டிராவிட் நான்கு இடங்கள் முன்னேறி 8வது இடம் பிடித்தார். மற்றொரு இந்திய வீரர் லக்ஸ்மன் ஐந்து இடங்கள் முன்னேறி, 18வது இடத்தில் இருந்து 13வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இவர்கள் இருவரும், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான முதலிரண்டு டெஸ்டில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதே காரணம். இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், 5வது இடத்தை தக்கவைத்துக் கொண்டு, முதல் 10வரிசையில் நீடிக்கிறார்.

ஆரம்ப வீரர் சேவாக் 20வது இடத்தில் உள்ளார்.

**சந்தர்போல் பின்னடைவு**

மேற்கிந்திய தீவுகள் அணியின் அனுபவ வீரர் சந்தர்போல், நான்கு இடங்கள் பின்தள்ளி 10வது இடம்பிடித்துள்ளார்.

டில்லி டெஸ்டில் சதம் அடித்து ஆறுதல் அளித்த இவர், கொல்கொத்தா டெஸ்டில் பெரிய அளவில் சோபிக்காததேபின்னடைவுக்குகாரணம்.

சங்ககார (இலங்கை), கலிஸ் (தென்னாபிரிக்கா), அலெஸ்டர் குக் (இங்கிலாந்து) ஆகியோர் முதல்- 3 வரிசையில் உள்ளனர்.

**ஓஜா முன்னேற்றம்**

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் பிரக்யன் ஓஜா, ஆறு இடங்கள் முன்னேறி 26வது இடம் பிடித்துள்ளார். டில்லி, கொல்கொத்தா டெஸ்டில் சுழலில் அசத்தி விக்கெட் வேட்டை நடத்தியதே முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம். சுழலில் அசத்திய மற்றொரு வீரர் அஷ்வின் 45வது இடம் பிடித்துள்ளார்.

டெஸ்ட் தொடரில் பங்கேற்காத இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர் கான் 6வது இடத்தை தக்க வைத்துக் கொண்டு முதல் -10 வரிசையில் நீடிக்கிறார்.

மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா 17வது இடத்தில் உள்ளார். அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் 16வது இடத்தில் உள்ளார்.

ஸ்ரையன் (தென்னாபிரிக்கா), அன்டர்சன் (இங்கிலாந்து), மோர்னே மோர்கல் (தென்னாபிரிக்கா) ஆகியோர் முதல் 3 வரிசையில் உள்ளனர்.

# சீனாவுக்குப் போட்டியாக...

இந்தியா மற்றொரு துறைமுகத்தை அபிவிருத்தி செய்கிறது. இலங்கைக்கு சீனா ஒரு உதவியை வழங்கினால், இந்தியா மற்றொரு உதவியை இலங்கைக்கு வழங்குகின்றது எனப் பலர் கருதுகின்றனர்.

ஆனால் இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை.

ஆசியாவின் மீள் எழுச்சியில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதாரம் முக்கிய பாத்திரம் வகிக்கின்றது.

உற்பத்தித்துறையில் சீனா முன்னணியில் இருந்தாலும் சேவைத்துறையில் இந்தியா முன்னணியில் இருக்கின்றது.

இவ்விரு நாடுகளுக்குமிடையில் போட்டிகள் இருந்தாலும் இலங்கை விவகாரத்தில் சீனாவுடன் இந்தியா போட்டியிடவில்லை.

இலங்கையுடன் காணப்படும் நீண்ட கால உறவுகளின் அடிப்படையிலேயே இலங்கைக்கான பல்வேறு உதவிகளையும் இந்தியா வழங்கி வருகின்றது.

இந்தியாவின் கொள்கைத் திட்டத்துக்கு அமைய வழங்கப்படும் இவ்வுதவிகள் அனைத்தும்சீனாவுக்குப் போட்டியாக வழங்கப்படும் உதவிகள் அல்ல. இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படுகின்றது என்ற எண்ணப்பாடு தவறானது என்றார். (எ-1)

# அனைத்து மக்களுக்கும்...

அரசியல் காரணமாக நாங்கள் உலக நாடுகளை விட பின்னுக்கு நிற்கின்றோம். இலங்கையின் இனப்பிரச்சினையை சமாதான முறையில் பேசித் தீர்ப்பதற்கு சுயநல அரசியலின் காரணமாக முடியாத நிலையில் உள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூவினங்களும்ஒன்றிணைந்தால்தான்தீர்க்கமுடியும்.

எந்தவொரு இனத்துக்கும் நான் விரோதமாக நடந்தது கிடையாது. நாங்கள் அனைவரும் சகோதரர்களாக அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவேண்டும். தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளில் சிறிதளவு ஏதும் குறையிருக்க நான் விடமாட்டேன் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ-1,6)

# வவுனியா...

டர்கள் -5, வயரிங் ரியூப்கள் -4, மிதிவெடிகள் -3, பீஜங் குண்டுகள் -17, வயர்கள் என்பன அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதமும் கல்மடு பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த பல வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

**TILKO JAFFNA CITY HOTEL**
70/6, K.K.S ROAD, JAFFNA. T.P: 0212225969
Web: cityhoteljaffna.com
e-mail: info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டபட்ட, குளிரூட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல் களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.: 077 6943479
K.Gunaseelan
Marketing Executive

**வெளிநாட்டு விசா சந்தேகங்கள் - தீர்வுகள்**

UK, Australia
New Zealand, Canada, America
German, China (MBBS) & Malaysia ஆகிய நாடுகளுக்கான

**Student Visa – Working Visa – Visit Visa**
**Migration & Visa Rejection/Appeal**

வெளிநாட்டு விசா சேவையில்
9 வருட அனுபவம் கொண்ட
THE VISA CENTRE
Migration, Work & Study Solutions
Free assessment for your visa
பணிப்பாளர் Dale Robot
இன் நேரடி வெளிநாட்டு விசா வழிகாட்டல்

பிரித்தானிய
UNIVERSITY of GREENWICH
இன் இலங்கை ஏக பிரதிநிதி
Rohan Wijesooriya
(IPC Lanka (Pvt) Ltd.)

மலேசிய பல்கலைக்கழகங்களின்
சர்வதேச மாணவர் அனுமதி ஒருங்கிணைப்பாளர்
கபிலன் முனியாண்டி
(Winning Magnitude Malaysia)

காலம்: 26-11-2011 சனி காலை 10 மணி
இடம்: சிகரம் ஊடக இல்லம்

அனுமதி இலவசம் | தொடர்புகளுக்கு சுகுணா: 021 300 80 60

பிரித்தானியா, அவுஸ்ரேலியா. நியூசிலாந்து, கனடா நாடுகளைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட கல்வி ஆலோசகர்கள் மற்றும் விசா ஆலோசனை சட்டவாளர்களின் நம்பகமான வழிகாட்டலுடனான 100% உத்தரவாதமான சேவை எம்மால் வழங்கப்படுகிறது
(விசா அனுமதி கிடைக்காவிட்டால் பணம் மீளப்பெறலாம்)

Get Set for Careers
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் தொ.பே.: 021 300 80 60

## இலங்கைக்கு...

இப் பூகம்பத்தினால் இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் எதுவுமில்லை என சுனாமி எச்சரிக்கை நிலையம் அறிவித்தது. கொழும்பிற்கு தென் மேற்கே 341 கிலோமீற்றர் தொலைவில் இப் பூகம்பம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 680 போராளிகள்...

மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் மற்றும் இரண்டாவது முறையாக அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற முதலாவது வருட பூர்த்தி என்பவற்றைக் குறிக்கும் முகமாகவே இப்போராளிகள் விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு பெற்று வருபவர்களில் சுமார் 680 போராளிகள் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள் ளதாக கூறப்பட்டுள்ளது.

அதேவேளை தற்போது புனர்வாழ்வு பெற்று வரும் போராளிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படுமென புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் எல். டபிள்யூ.சி.பீ.பீ. ராஜகுரு தெரிவித்துள்ளார்.

படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழு ஒன்றுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவின் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு அரசாங்கம் வழங்கிய புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (எ-1)

ISO 9001-2008 சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணினிக் கற்கைநெறிகள்........
e.com Computer Training Centre
பாடசாலை மாணவர்கள், A/L பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றை காத்திருக்கும் மாணவர்கள், அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு குறைந்த செலவில் கணினிக் கற்கை நெறிகள்
பயிற்சி நெறி 03 மாத காலம் மட்டுமே!



- Diploma in Hard ware/Software Engineering
- GVET (Australian English Course)
- Certificate in Internet & E-Mail
- Diploma in Desk Top Publishing
- Diploma in Computerized Accounting
- Diploma in Microsoft Office

Head Office: No.95A Temple Road, Nallur, Jaffna
Branch: K.K.S Road, Kondavil, Jaffna.
Call... 021-7429005 021-7200902

**ALL KIND OF MOBILE PHONES UNLOCKING**
**NOKIA SL 3 PHONES UNLOCKING RS. 3,500/- NOW**
**R & R Telecom Jaffna (Pvt) Ltd.**
M.P.C.S. Building, 127, K.K.S. Road, Jaffna.
Contact - Mohamed Zuhair (Razmi)
No. 072 2441441
(C-5008)

**யாழ். மண்ணில் முதன் முறையாக**

**DHL இன் நேரடிச் சேவை...**



**அன்புடன் யாழ்ப்பாணத்திலிருந்து உலகின் ஏனைய பாகங்களுக்கு**
நிலையம் இப்போது யாழ்ப்பாணத்தில்
உலகின் 200க்கும் மேற்பட்ட முக்கிய நகரங்களில் DHL உங்களுக்குத் தேவையான எந்தவொரு பொருளையும் உங்களது குடும்பத்திற்கோ அல்லது நண்பர்களுக்கோ அனுப்பிவைக்க உதவுகிறது.

அனுப்ப இன்றே விரையுங்கள்
(8747)



யாழ். நகருக்கு வந்துள்ளதனால்
தற்போது உங்களுக்கு:
- கவர்ச்சிகரமான கட்டணங்கள்
- உங்கள் வாசலுக்கே பொருட்கள் கிடைக்கும் வசதி
- இல்லத்தில் அல்லது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளல்
  - தபால்கள்
  - பதிவுத்தபால்கள்
  - பொதிகள்
  - ஆவணங்கள்

**பல்கலைக்கழக ஆவணங்கள் 50% விலைக்கழிவுடன் அனுப்பப்படும்**

**யாழ். மண்ணில் உங்களுக்காக எங்கள் அலுவலகம்**

**No.94, K.K.S Road, Jaffna**
**Tel: 0214923528**

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.